Koviloor Digital Library

வள்ளலார்
MADALAYAM
KOVILUR-630 307
வகுத்த வழிகள்

(குறிப்புரையுடன் கூடியது)

ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்

சென்னை — 1.

Koviloor Digital Library

Koviloor Digital Library

வள்ளலார் வகுத்த வழிகள்

(குறிப்புரையுடன் கூடியது)

KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 91-4565)

குறிப்புரை ஆசிரியர்:

வித்துவான், பாலூர் - கண்ணப்ப முதலியார்

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 8987

வெளியிட்டவர்:

ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்

34, சின்னதம்பித் தெரு,

சென்னை.

[உரிமைப் பதிவு செய்தது] 1952 [விலை 8 அணா

Koviloor Digital Library

Printed at
the 'Caxton Press'
Madras - 1.

Koviloor Digital Library

முன்னுரை

வள்ளலார் என்று இங்குக் குறிப்பிடப்பட்டவர் வடலூர் இராமலிங்க சுவாமிகளே ஆவார். இவர் மக்கள் நல்வழியில் சென்று உய்யும் பொருட்டுத் திருவருட்பா என்னும் சீரிய நூலைப் பாடி அருளிய தோடு நில்லாமல், பற்பல உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். அவ்வுரைநடை நூல்களில் அமைந் துள்ளகருத்துக்கள் அருமையும்பெருமையும் வாய்ந் தவை. ஆனால், மக்கள் அவற்றைப் பெரிதும் படித்து அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் மனம் முற்றும் அருட்பாவில் தோய்ந்து கிடப்பதே இதற்குக் காரணம். அங்ஙனம் அருட்பாவில் தோய்ந்த மனத்தைச் சிறிது வள்ளலாருடைய உரைநடை களிலும் திருப்பவேண்டும் என்னும் எண்ணங் கொண்டே இந்நூல் வள்ளலார் வகுத்த வழிகள் என்னும் பெயருடன் வெளிவருவதாயிற்று. இத் தொகுப்பு உரைநடை நூலில் ஐந்து அரிய பெரிய கட்டுரைகள் அமைந்துள்ளன. அவை 1. திருவருளை எவ்வாறு பெறக் கூடும்? 2. வந்தனை முறை. 3. மெய்ம் மொழியும் ஒழுக்கமும். 4. நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல். 5. உபதேசம் என்பன. இவற்றுள் மெய்ம்மொழியும் ஒழுக்கமும் என்னும் கட்டுரை நேரே அவர் கையால் எழுதப்பட்டதன்று என்றும் அவருடைய அணுக்கத் தொண்டர் ஒருவரால் வள்ளலாரின் திருவார்த்தைகளைக் கொண்டு எழுதப்பட்டது என்றும் கருதப்படுகிறது. இதனை நம் நினைவைத்தற்குரிய செய்தியாகும்.

Koviloor Digital Library

இக்கட்டுரைகளில் பல அரிய சொற்களும், அருந் தொடர்களும், மேற்கோள் பாக்களும் காணப்படுதலின், அவை யாவற்றிற்கும் தெளி பொருள் விளக்கமாக் குறிப்புரை கூடுமானவரையில் என்னால் எழுதப்பட்டுள்ளது. அதன் துணைகொண்டு கட்டுரைகளை எளிதில் அறிந்து கொள்ளலாம். அவ் விளக்கக் குறிப்புக்கள் அனைத்தும் நூலின் ஈற்றில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்று என்னை ஊக்குவிக்குமானால், மேலும் பல வள்ளலாருடைய உரைநடைகளை அச்சிட யான் முன்வருவேன். குற்றம் குறைகள் இருக்குமாயின், அவை பொருத்தமானவைகளாக இருப்பின், ஏற்று அடுத்த பதிப்பில் அத்திருத்தங்களுடன் பதிப்பித்து வெளிப்படுத்துவதோடு, அவர்கட்கு நன்றி செலுத் தும் கடமையுடையவனும் ஆவேன்.

இந்நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதி உதவிய சைவசித்தாந்த நுண்ணூல்களில் ஆராய்ச்சிப்பெரும் புலமை பெற்ற, சைவத் திருவாளர் திரு. பாரிப் பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கட்கும், இந்நூலை, அழகுற அச்சிட்டு வெளிப்படுத்திய வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் கம்பெனி யாருக்கும் என்னன்றி அறிதலான வணக்கம் என் றும் உரியதாகும்.

‘அம்மையப்பர் அகம்’
77, அவதானம் பாப்பையர் தெரு,
சூளை, சென்னை, 31-1-’52.

இங்ஙனம்
பா. து. க.

Koviloor Digital Library

சைவ சித்தாந்த நூல்களில் ஆராய்ச்சிப் பெரும் புலமைபெற்ற சைவத்திருவாளர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் எழுதிய

அணிந்துரை

ஓம்

திருச்சிற்றம்பலம்

தேனும் பாலும் உடன் கலந்து அட்ட தேமாஞ் செழுங்கனித் தீஞ்சுவைத் திரள் என இலங்கும் திருவருட்பாவினை அருளிய அருட்பிரகாசவள்ளற் பெருமான், செந்தமிழ் இயல்வளங் கொழிக்கும் உரை நடை வகையான் இயற்றியருளிய நிறைபொருள் கட்டுரைகள் பல இலங்குகின்றன. அவை தம்முட் சில, வள்ளற் பெருமான் இயற்றியருளியன வல்ல என்னும் நிலைக்குரியனவாகக் காணப்படுகின்றன. சிந்தாமணியிற் கந்தியார் பாட்டுக்கள் போன்று. மல மாசின் செருக்குடைய சிலர் திருவருளில் திளைத்த ஆன்றோர் அருட் செயல்களிலும் இடைச் செருகலாகத் தாம் நினைந்தவாற்றான் சில எழுதிச் சேர்த்தல் உண்டென்பது, செந்தமிழ் மாமறையாகிய தேவாரத் திருமுறைகளின் கண்ணும் திருவருட் [illegible]வியமாகிய திருத்தொண்டர் புராணத்தின் கண்ணும் வெள்ளிப்பாடல்கள் விரவிய செயலான் உண[illegible]படுகின்றது.

Koviloor Digital Library

இங்ஙனம், அக்கட்டுரைகளில் கலந்து நிற்கும் இடைச் செருகல்களாய அவைகள், வள்ளற் பெருமான் அன்பு நலங்கனிந்து அருளொளி வீசும் அரும் பொருள் உரைநடையின் உண்மை அழகினைப் பல் கால் பயின்று நன்காய்ந் துணரும் நற்புலமை உடையார்க்கு, நவமணித் தொகுதியின் இடைப் பட்ட பரல்எனப் புலப்படும் பான்மையில் இலங்கு கின்றன. இச்சிறிய முன்னுரையில் அதுபற்றிய விரிவெலாம் எடுத்தியம்ப இசைந்திலம்.

வள்ளற் பெருமான் இயற்றியனவாக வழங் கும் அக்கட்டுரைகளுள் இக்காலத்தார்க்கு எளிதிற் பயன்தரக் கூடிய நிலையிலுள்ளன சிலவற்றினைத் தொகுத்து வெளியிடவிழைந்த எம்கெழுதகை நண் பர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர் கள் அக்கட்டுரைகளுள் காணப்படும் அருஞ்சொற் பொருள்கள் படிப்போர்க்கு எளிதின் விளங்குமாறு எழுதிச் சேர்த்த குறிப்புரை அவ்வச் சொற்களின் பொருள்களை இனிதின் உள்ளவாறுணர்த்தும் பெற்றியின் இலங்குகின்றது.

குறிப்புரை எழுதிய புலவர் அவர்கள் சமய நூற் புலமையிற் சிறந்து, சமயநெறி பிறழாது, தக் வாற்றான் சமயப் பணிபுரியும் பெற்றியராத் திக[ழ்] பவராதலின் சமய நூற்களுக்கு இவர் போன்[றோ] உரைவரைதலே தகுதியின் மிக்க பயனுடைத்தா

Koviloor Digital Library

இந்நூலை வெளியிடும் புகழின் மிக்க அச்சகத்தார், சமய நூற்றுறைகள் பலவற்றிலும் மேன்மேலும் இவரைப் பயன்படுத்தி ஊக்கம் காட்டுமாறும், நண்பர் அவர்கள் தமிழ் மொழிக்கும் சைவ நெறிக்கும் பயன்தரத்தக்க பணிகள் பலவற்றினை எடுத்து நன்கு முடித்துப் பொருளொடு புகழும் புண்ணியமும் ஒருங்கு மிகப்பெற்று நீடிய வாழ்நாள் நிரம்பப் பெற்று வாழுமாறு அம்பலவாணன் அருள் புரிவானாக என அவனது திருவடித் தாமரைகளை வழுத்துகின்றேம்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
	முன்னுரை - - - -	iii
	அணிந்துரை - - - -	v
1.	திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? -	1
2.	வந்தனை முறை - - - -	8
3.	மெய்ம் மொழியும் ஒழுக்கமும் - -	14
4.	நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல் -	25
5.	உபதேசம் - - - -	44
	குறிப்புரை - - - - -	64

Koviloor Digital Library

வள்ளலார் வகுத்த வழிகள்

1. திருவருளை எவ்வாறு பெறக் கூடும்?

கடவுளது திருவருளை எவ்வாறு பெறக் கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவ காருண்ய மென்பது சீவர்கள் தயவு. ஆதலால், சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெரு வெளிச் சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந்தயவாகிய கடவு ளருளைப் பெறவேண்டும்.

அக் கடவுள் தயவாகிய அருள் எத்தன்மை யுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக்கொண்டு நன்மையாதிகளை முதலிய விதிப்பதாயும் அறி பவர்களின் தரத்திற் கொத்ததாயும், அறிபவர் கள், எந்த வஸ்துவை அறிகின்றார்களோ, அந்த வண்ணமாயும் உள்ளது.

Koviloor Digital Library

அத்தன்மையான அருள், பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகிறது? காண்பார், காணுமிடம், காணப்படுமிடம்; அறிவார், அறியுமிடம், அறியப்படுமிடம்; தூண்டுவார், தூண்டுமிடம், தூண்டப்படுமிடம்; சுவைப்பார், சுவைக்குமிடம், சுவைக்கப்படுமிடம்; அனுபவிப்பார், அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம்; கருதுவார், கருதுமிடம், கருதப்படுமிடம்; முகருவார், முகருமிடம், முகரப்படுமிடம்; கேட்பார், கேட்குமிடம், கேட்கப்படுமிடம்; முதலியவாய் விளங்கும்.

இவ்வண்ணம் விளங்கும் அருளை, நாம் பெறுவதற்கு உபாயம் என்ன?

புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியாரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

நன்மை தீமை என்பவை யாவை? நன்மை தீமை என்பவை, புண்ணிய பாவம்.

புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவித்தற்கும் முயல்வதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும்.

Koviloor Digital Library

பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருப்பது.

புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறு அடைகின்றன ?

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகையாய் நம் மனம் அடையும்.

அவையாவன: (1) பரதாரகமனம் பண்ண நினைத்தல், (2) அன்னியனுடைய சொத்தைக் கிரகிக்க நினைத்தல், (3) அன்னியருக்குத் தீங்கு செய்ய நினைத்தல், (4) முடியாத காரியங்களை நினைத்து, அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல், இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள்.

(1) பொய் சொல்லல், (2) கோட்சொல்லல், (3) புறங்கூறல், (4) வீணுக்கழுதல் இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள்.

(1) பிறர் மனைவியைத் தழுவுதல், (2) புசிக்கத் தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல், (3) அன்னியர்களை இம்சை செய்தல்,

Koviloor Digital Library

(4) தீங்கு செய்கிறவர்களைத் தடுக்காமல், அவர்களுக்கு உபகாரஞ் செய்தல் இந்நான்கும் தேகத்தால் உண்டாகும் பாவங்கள்.

இவை போன்றவைகளைத் தவிர்ப்பது: (1) அன்னியர்களுக்கு நன்மையுண்டாக நினைத்தல், (2) பொறாமை அடையாதிருத்தல், (3) அன்னியர் சொத்தைத் தனதாக எண்ணுதிருத்தல், (4) தனது மனைவியைத் தவிர, அன்னியமான பெண்களைத் தாய், சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல், இவை மனத்தால் வரும் புண்ணியங்கள்.

(1) பொய் சொல்லாமை, (2) கோட் சொல்லாமை, (3) இன்சொல்லாடல் (4) தோத்திரம் செய்தல். இவை நான்கும் வாக்கினுலுண்டாகும் புண்ணியங்கள்.

அன்னியர்களுக்குத் தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலான நன்மையான கிருத்தியங்களெல்லாம் புண்ணியங்கள்.

அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்?

அறிந்த பாவங்கள் செய்தபின் தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்த பின், " நாம் பாவச் செய்கையை முன்

Koviloor Digital Library

னமே தெரிந்தும் மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்கினலும், தாட்சண்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!" என்று பச்சாத்தாபப்பட்டுப் பெரியோர்களை அடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும், விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி, யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய தலங்களிற் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்னவிரயஞ் செய்தால் நீங்கும். மேலும் சத்தியற்றவர்களாயும், வார்த்திகர்களாயும் உள்ளவர்கள், மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பட்சத்தில், பச்சாத்தாபத்துடன் பாவகாரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாத பாவங்கள் யாவெனில் நடக்குங் காலத்திலும், நீராடுங்காலத்திலும், சயனகாலத்

Koviloor Digital Library

திலும், தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங் களாம். இவ்வாறன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் தினஞ் செய்யும் ஜபத்தாலும், பாராயணத் தாலும், தோத்திரத்தாலும் விருந்துபசரித்த லாலும், தெய்வப் பராவலாலும் நீங்கும்.

பிராயச்சித்தம் முதலியவைகள் செய்யா விட்டால், பாவங்களாலடையும் கதி என்ன?

மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டா ளாதி சரீரமுண்டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீரமுண்டா கும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீரமுண்டாகும்.

வேதாந்திகள், "பாவம் முதலிய கருமங் களும், புண்ணியம் முதலிய ஏதுக்களும், நமக் கில்லை; நாம் சர்வசாட்சி" என்கிறார்களே. அஃ தென்ன?

தேகவாசனை, இந்திரிய வாசனை, கரண வாசனை, பிராணவாயுவின் செயற்கையி லுண் டாகும் வேறுபாடு, முதலிய நன்மைகளில் சலிப் பற்று, ஆகாரம், நித்திரை, பலம், முதலியவை களில், தாம் சலித்தும், சோர்ந்தும், திடுக்கிட்டும் இல்லாமல், நிவாத தீபம்போல் விளங்கும்

Koviloor Digital Library

ஜீவன்முத்தர்கள் சமூகத்தில், பாப கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும் பிரயோசனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் காண்பார்கள். அத்தன்மையுடைய நித்திய, முக்த, சுத்தமான தேக சித்தர்கட்குப் பாவபுண்ணியம் இல்லையென்பது அவர்கள் சொல்லவேண்டியதில்லை. நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ சாத்விகங்கள் இப்பொழுது நமக்கு அசுத்த தேகமாயும், அசுத்தப்பொறியாயும், அசுத்தக்கரணமாயும், அசுத்த அனுபவமாயும், அசுத்த அறிவாயும் இருப்பதுபோல் இரா. தத்த படத்தைப்போல் காரியத்தில் இலதாயும், காரணத்திலுள்ளதாயும், அறிவே வடிவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அழகாய், அறிவே உருவாய், அறிவே உணர்வாய், அறிவே அனுபவமாய், அறிவே அறிவாய், விளங்கும்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை!

Koviloor Digital Library

2. வந்தனை முறை

ஆசாரியனுக்குச் சிஷ்யன் வந்தனஞ் செய்வதற்கும், பெரியவர்களுக்குச் சிறியவர் வந்தனஞ் செய்வதற்கும், எல்லவர்க்கும் ஞானிகள், யோகிகள், சாந்தர்கள், வந்தனஞ் செய்வதற்கும் காரணமும் அதன் பிரயோசனமும் யாவெனில், வந்தனஞ் செய்வது ஆயுள் விர்த்திக்கும், அறிவு விளக்கத்திற்கும், ஆதாரமாயிருக்கின்றது. சிஷ்யனுக்கும் சிறியோருக்கும், ஆசாரியனும் பெரியோரும் வந்தனஞ் செய்தால், ஆயுள் விர்த்தியும், அறிவு விளக்கமும் குறைவாகும். இதற்குச் சம்பந்தம் யாதெனில் ஒரு ஜீவனுக்கும் திருவிளக்குக்கும் சம்பந்தம் இருக்கின்றது. எப்படியெனில், ஒரு திருவிளக்கு எரிவதற்கு நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை உதவுகிறதுபோல், ஒரு ஜீவனுக்கு ஆன்ம விளக்கத்துக்கும் மலப் போக்குக்கும் ஆதாரமான நிரகங்காரம் என்கிற நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை ஊட்டி, விளக்க வைக்க வேண்டி

Koviloor Digital Library

யது. ஆனல், மேற்சொன்ன இரண்டுஞ் சந்திக்கும்போது, நோக்கமான கெட்ட உஷ்ணத்தைச் சம்பந்தப்படுத்தினல், லாபஞ் செய்யாதோவெனின், செய்யாது. திருவிளக்கு ஜல உஷ்ணத்தையும் காற்றினலுண்டாக வேண்டிய உஷ்ணத்திற்கு மேற்பட்ட அதிக உஷ்ணத்தையும் பெற்ருல் கெடும். அது போல், ஜீவனுக்கு மும்மலத்தாலாகிய உஷ்ணத்தையும், இன்னும் பற்பல பேதமுள்ள கெட்ட உஷ்ணத்தையும் சம்பந்தப்படுத்தினல், அது கெட்டுப்போய்விடும். இது யாவருக்கும் திருஷ்டாந்தமாய் இருக்கிறது அல்லவா?

இவற்ருல் ஆசாரியனையும், பெரியவர்களையும், சிஷ்யனும், சிறியவர்களும் வணங்கினல் ஆயுள் விருத்தியும், சிஷ்யனையும், சிறுவர்களையும், ஆசாரியரும், பெரியவர்களும் வணங்கினல் ஆயுள் குறைவும் உண்டாகுமென்கிற சம்பந்தம் எப்படியெனில், திருவிளக்கு எரியச் சாதாரண காலத்தில் அதம பட்சத்திற்குரிய கொட்டை எண்ணெய், இலுப்பை எண்ணெய் முதலியவற்ருல் விளக்கு வைக்கின்றதும், கொஞ்சம் விசேட காலத்தில் நல்லெண்ணெயினல் விளக்கு வைக்கின்றதும், கட

Koviloor Digital Library

வுள் சந்நிதானத்திலும், ஞானசிரியர் சந்நிதானத்திலும் பசுவின் நெய்யிட்டு விசேட விளக்கத்தையுடைய விளக்கு வைக்கின்றதும்போல், கொட்டை எண்ணெய் முதலாகியதற் கொப்பாகிய ஒரு ஜீவன், அதமபட்சம் மத்திம பட்சத்திற்குரிய ஒவ்வொரு மலத்தினுலுண்டாகிய தோஷத்தைப் போக்கிக்கொள்வதில், ஆத்ம விளக்கத்திற்கு ஆதாரமாகிறதும், விசேஷமாய்க் கடவுளாதி ஆசாரியர் சந்நிதானத்தில் வைக்கும் நெய் விளக்குக்கு ஒப்பான மும்மலப் போக்கான சுத்த நிரகங்காரமென்கிற தைலத்தை ஆன்மாவுக்கு உண்டாக்கி வைப்பதில், ஜீவவிர்த்தியும் உண்டாகின்றது. திருவிளக்கு அதன் உஷ்ண சம்பந்தமான தைலங்களை விட்டுக்கொண்டு வருவதில் விளக்கு எரிந்துகொண்டிருப்பது போலும், அதில் நல்லெண்ணெய், நெய் முதலியவை விட்டெரிப்பதில், விசேடப் பிரகாசமாய் விளக்கு எரிவது போலும், ஜீவனுக்கு அதன் உஷ்ண சம்பந்தமான மும்மலப் போக்கையுண்டுபண்ணுவதில், ஜீவிப்பு விர்த்தியுண்டாகிறதும், விசேஷமாய் நிரகங்காரமென்கின்ற சுத்த உஷ்ணத்தை உண்டுபண்ணிக்கொண்டு வருவதில் ஜீவனுக்கு விசேஷ விளக்கத்துக்குரிய ஜீவிப்

Koviloor Digital Library

பிருந்துகொண்டிருக்கின்றதும், இதனுல்தான் தைலத்தைக் கொண்டிருக்கிற திருவிளக்கு விர்த்தியாவதுபோல, மும்மலப் போக்கைக் கொண்ட ஜீவனும் ஆயுள் விர்த்தியடைகின்றது. ஆதலால், ஆசாரியரையும் பெரியவர்களையும் சிஷ்யனும் சிறியோரும் வணங்குவதில் நிரகங்கர சக்தி பெறுவதனுல், ஜீவனுக்கு ஆயுள் விர்த்தி உண்டாகின்றது.

சிஷ்யனையும் சிறியோரையும் ஆசாரியரும் பெரியோரும் வணங்குவதில், ஆயுட்குறைவு எப்படி உண்டாவதெனின், ஒரு மணி வரையில் எரியத்தக்க எண்ணெயிட்டு எரிவித்திருக்கும் சிறிய திருவிளக்குக்குச் சமீபத்தில், ஒரு பெரிய பந்தத்திற்கு ஒப்பான ஒரு பெரிய திருவிளக்கு வைத்து எரித்தால், ஒருமணி நேரம் எரியத்தக்க அந்தத் தீப உஷ்ணத்தைப் பெரிய தீபம் கிரகித்துக்கொள்வதில், ஒரு மணி நேரம் எரிய வேண்டிய தீபம் அரைமணிக்குள் எரிந்து விடுவதுபோல், ஆசாரியனும் பெரியோரும் சிஷ்யனையும், சிறியோரையும் வணங்குவதில், பெரிய தீவர்த்திக் கொப்பான ஆசாரியர் பெரியார் என்கின்ற யோக்கியதையோடு, நிர்மல ரகிதமான நிரகங்காரம்

Koviloor Digital Library

என்கின்ற மத்தாப்புக்கு ஒப்பான விளக்கத்தைச் சிறிய விளக்கான சிஷ்யன் சிறியோர் முன்னிலேக்கு விளக்கி வைப்பதில், சின்ன விளக்கடைந்த குறைவைப்போல் ஜீவனுடைய ஜீவ விர்த்தியைக் குறைக்கின்றது. இந்த நியாயத்தால், ஆசாரியனும் பெரியோரும் சிஷ்யனேயும், சிறியோரையும் வணங்கினுல், ஆயுள் குறைவை அடையுமென்று திருஷ்டாந்தமாயிருக்கிறது.

ஆசாரியோன், பெரியோர், ஞானி, யோகி இவர்கள் சிறியோரையும் சிஷ்யனையும் வணங்கினுல், ஆயுள் குன்றவு வரமாட்டாது என்றதெப்படி யெனின், மேற்குறித்தவர்களது விளக்கத்துக்கு மேற்பட்ட விளக்கம் இவர்களுக்கு அகத்திலுண்டாகுமானல், ஆயுள் விர்த்திக்குக் குறைவு வரமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தம் சமயச்சார்பில் பரமசிவம், சுப்ரமணியசுவாமியிடத்தில் அநுக்கிரகம் பெற்றிருப்பதும், ஞானிகள்மாட்டுச் சம்பந்த சுவாமிகளே அந்தச் சுவாமிகளின் தாய் தந்தையர் வணங்கியதும், அப்பர் சுவாமி முதலியோரும் வணங்கியதும் உணர்க. மேலும் சமய, மதாதீத ஞானிகளுக்கும், சமய மதங்கட்

Koviloor Digital Library

ருட்பட்ட பெரியோர்களுக்கும், இவ்வுலகத்தின் கண்ணுள்ள ஜீவராசிகளின் தேகமாகியாவும், தமது பதியின் தூலகூக்கும் ஆதலாலும், தமது பரிபூரண ஆன்ம அனுபவத்தின்கண் தோன்றிய அனுபவங்களாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாதலாலும், எல்லாம் அவர்கட்குத் தாமன்றி இரண்டற்றிருப்பதாலும், எல்லாவற்றையும் இவர்கள் அத்துவிதத்தில் சிவமெனக் கண்டுணர்தலாலும், இவர்கள் சென்ற இடமெல்லாம் கண்டு, சிவமாயும் தாமாயும் நீக்கமறக் கைகூப்புவது இயற்கை. ஆதலால், மல சகிதர்களான ஜீவர்கள், மதிப்புடையவர்களாதலால், ஆசாரிய சிஷ்யபாவத்தில் வணங்கலாதி தொழிலால், ஜீவிப்பின்மையும் விர்த்தியும் உண்டாகின்றன. மகான்கள் கைகூப்புவதில் ஆன்மவிர்த்தி குறைவுபடாது; ஜீவர்களின் அறிவு விளங்கும். ஏனெனில், அவர்கள் சங்கல்பம் சுத்தமாதலால், இவர்களை மேலேற்றும்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை !

Koviloor Digital Library

3. மெய்ம் மொழியும் ஒழுக்கமும்

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களனைவரும் நாமும் அறியவேண்டுவதும் ஒழுகவேண்டுவதும் யாவெனில், இயற்கையில் தானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும், இயற்கையில்தானே உள்ளவராய்விளங்குகின்றவரென்றும், இரண்டுபடாத பூரண இன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சக்தியால் 1. தோற்றுவித்தல், 2. வாழ்வித்தல், 3. குற்றம் நீக்குவித்தல், 4. பக்குவம் வருவித்தல்

Koviloor Digital Library

5. விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங் கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வ காருண்யரென்றும், சர்வ வல்லவரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப் பெருந் தலைமை அருட்பெருஞ் சோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும் பூரணப் பொதுவழியில், அறிவாரறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை, இவ்வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து, அன்பு செய்து, அருளையடைந்து, அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளால் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பல வேறு மார்க்கங்களிலும், பலவேறு லட்சியங்களைக் கொண்டு, நெடுங்காலம், பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவும் இன்றி, விரைந்து, விரைந்து

Koviloor Digital Library

பல்வேறு ஆபத்துக்களினுல் துன்பத்திலழுந்தி, இறந்து இறந்து, வீண்போயினேம்; வீண்போகின்றேம்.

ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து, விரைந்து இறந்து, இறந்து, வீண்போகாமல், உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய சுப குணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வில், பெருஞ்சுகத்தையும், பெருங் களிப்பையும் அடைந்து வாழும்பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள், தாமே திரு உள்ளங் கொண்டு, சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய, உண்மை விளங்கச் செய்கின்ற, ஒரு ஞான சபையைச், சித்திவளாகம் என்னும், இச் சந்நிதானத்திற்கு அடுத்த உத்தரஞான சிதம்பரம், அல்லது ஞானசித்திபுரம் என்று குறிக்கப்படுகின்ற வடலூர் பார்வதிபுரத்தில், தமது திருவருட்பா சம்மதத்தால் இயற்றுவித்து, இக்காலந் தொடங்கி அறிவு குறிக்கப்

Koviloor Digital Library

படாத நெடுங்காலம் அற்புத சித்திகள் எல்லாம் விளங்க, யாமே அமர்ந்தருளித் திருவிளையாடல் செய்தருள்கின்றோம்,"என்னும் திருக்குறிப்பை இவ்விடத்தே தாயினுஞ் சிறந்த பெருந் தயவுடைய நமது கருணையங்கடலாராகிய அருமைத் தந்தையார் அருட்பிரகாச வள்ளலார் முன்னிலையாகப் பலவாற்றானும் பிரசித்தப்பட வெளிப்படுத்தி, அருட்பெருஞ்சோதி சொருபராய் அப்பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக்கொண்டு பொற்சபை, சிற்சபைப் பிரவேசஞ் செய்வித்தருளி, அரிய அவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந்தருளிய எல்லாம் வல்ல சித்தத் திருக்கோலங் கொண்டு, அருளரசாட்சித் திருமுடி பொறுத்து அருள் விளையாடல் செய்தருளிய நிமித்தம், ஈரேழு பதினன்கு உலகங்களிலுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, "இஃது என்னை? இஃது என்னை? என்று அதிசயிக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம், அடுத்த அதிசமீபித்த தருணமாயிருத்தலினல், அங்ஙனம் வெளிப்படுந் திருவரவு பற்றி எதிர்பார்த்தலாகிய விரதங் காத்தலில் நிற்கும். அல்லது நிற்க வேண்டிய நாம் எல்லவரும் மேற்குறித்த அசிந்திய அற்புதத்திரு வரவு நேரிட்ட கணத்தில்தானே, சுத்த

Koviloor Digital Library

சன்மார்க்க அரும் புருஷார்த்தங்களின் பெரும் பயன்களாகிய எக்காலத்தும் நாசமடையாத சுத்தம் அல்லது சுவர்ணதேகம், பிரணவ தேகம், ஞானதேகம், என்னும் சாகாக்கலா னுபவ சொரூப சித்தித் தேகங்களும், தன் சுதந்தரத்தால், தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெருவல்லபமும் கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞான மும், கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று, வாழ்கின்ற பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைவதற் கான சுத்த சன்மார்க்கத் தனிப்பெருநெறி யைப் பற்றுவதற்குரிய உண்மை ஒழுக்கங் களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுக வேண்டுவது அவசியமாதலில், அவ்வொழுக்கங் கள் இவை என உணர வேண்டுவது இன்றி யமையாததாகும்.

சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள்

(1) இந்திரிய ஒழுக்கம், (2) கரண ஒழுக் கம், (3) சீவ ஒழுக்கம், (4) ஆன்ம ஒழுக்கம் என நான்கு வகைப்படும். அவற்றுள்,

Koviloor Digital Library

1. இந்திரிய ஒழுக்கம்

நாதமுதலிய தோத்திரங்களை உற்றுக்கேட்டல், மற்றவைகளைக் கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவி புகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றி இருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல், பொய் சொல்லாதிருத்தல், ஜீவ இம்சை நேரிடுங்கால் எவ்விதத்திலும் தந்திரத்திலாவது தடை செய்தல், பெரியோரிடத்திற் செல்லுதல் என்றால், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகரிக்கும் நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலசல பாதைகள் அளவு மீறாமலும், சிரமங் குறையாமலும் அளவைபோல் தந்திர ஔஷதிகளாலும் ஆகாரப் பக்குவத்தாலும், பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கம் ஆகும்.

2. கரண ஒழுக்கம்

சிற்சபையின்கண் மனத்தைச் செலுத்துவது தவிர, மற்றெந்த வகை ஆபாசத்திலும்

Koviloor Digital Library

செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர்குற்றம் விசாரியாதிருத்தல்; தன்னை மதியாதிருத்தல்; செயற்கைக் குணங்களால் உண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாயிருத்தல்; பிறர்மேற் கோபியாதிருத்தல்; தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல்; அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியவாம்.

3. ஜீவ ஒழுக்கம்

எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு, முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல் முதலியவாம்.

4. ஆன்ம ஒழுக்கம்

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்தும் உள்ள ஆன்மாக்களிடத்தும் இரங்கி, ஆன்மாவே சபையாகவும், அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியவாம்.

இங்ஙனங் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் என்னு

Koviloor Digital Library

மிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை யுணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுகவேண்டும்; ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்னும் இரு வகையான அரிய ஒழுக்கங்கள் திருவருள் துணை பெற்ற பின்னரன்றிக் கைகூடா: ஆதலால், அவ்வொழுக்கங்களைப் பெற்று ஒழுக வேண்டுவதற்கும் ஆன நன்முயற்சிகளில் பழகவேண்டும்.

அன்றியும், இவ் வண்ணமான ஒழுக்கங்களில், இயன்றமட்டில் ஒழுகப் பெற்று, இடந் தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க் கிரங்கல், பெருங் குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய் திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும்.

அன்றியும், சைவம் வைணவம் சமணம் பவுத்தம் முதலாகப் பல பெயர்கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங் களிற் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவ சித்தி விகற்ப பேதங்களென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்

Koviloor Digital Library

கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம் சித்தாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பல பட விரிந்த மதங்களும் மார்க்கங்களும், சுத்த சன்மார்க்கானுபவ லேச சித்தி பேதங்களென்றும், கேள்விப்பட்டிருக்கின்றனம். ஆதலில், அத்திருவார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்தப்பெற்று, அவைகளின் அனுபவங்களை அடைதல் வேண்டுவதுபற்றி, அவ்வச் சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாது நிற்றலும், அவற்றில் சத்திய உணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும். அன்றியும்,உலகியற்கண் பொன்விஷய இச்சை பெண் விஷய இச்சை, மண் விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும், நமது அறிவை ஓர் அணுத்துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு, கடவுள் பக்தி,உயிரிரக்கம், பொதுநோக்கம், திரிகரண அடக்கம், முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, உண்மை உரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்கு உபகரித்தல், முதலியவாகக் குறித்த நற்செய்கைகளையும் உள்ளபடி பெற்றுச் சித்திவளாகம் என்னும் இம்மஹா சந்நிதானத்தில் தானே

Koviloor Digital Library

தரிக்கப் பெறவும், உலக முகப்பட்ட பராக்கி
ஞல் விலகி ஏமாந்துவிடாமலும், நமது எல்லாம்
வல்ல ஆண்டவனுர் அற்புதத் திருவரவு குறிக்
கும் வெளிப்படுகைக்கு எதிர்பார்க்கும் நிலை
யினராய், எல்லா அண்ட சராசரங்களையும்
தமது தனித் திருவருட் செங்கோல் கொண்டு
நடாத்துவித்தருளும் பேரருட் பெருங்கருணை
வாய்ந்த தனிப்பெருந் தலைவனது அரிய திருவரு
கைச் சம்பந்தமான வழிபடுகை, அல்லது மங்
கலம் புனைதல், முதலிய திருப்பணியினிடம்
நமது கரணேந்திரியங்களை விடுத்துக் குதூகலத்
துடன் விந்து விளக்கம், நாத ஒலி, என்பவற்
ருல் புறக்கடையில் விலகப்படாமலும், ஆண்
டவனுரது அருளற்புத ஞான சித்தத் திருமேனி
யின் மங்கலத் திருக்கோலத்தைக் கண் காட்சி
யாக, உடல் குழைய, உள்ளங்குளிர, ஆனந்
தக் கண்ணீர் கொண்டு, பரவசத்துடன், தரிசிக்
கப் பெறும், பெரும் புண்ணிய முடையவர்க
ளாய் எதிர்படவாய்க்கப் பெறவும், நின்ருமே
யானுல், நாம் எல்லவரும் சுத்த சன்மார்க்கத்தி
னுக்கு உரிமையுடையவர்களாகி, அறிவு வந்த
கால முதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளை
யும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும்,
அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்

Koviloor Digital Library

தறியாத அற்புதக் குணங்களையும், செய்தறியாத அற்புத செயல்களையும், அனுபவித்தறியாத அனுபவங்களையும், வெளிப் படத் தரிசிக்கும் அதே கணத்திலுள்ளே பெற்றுப் பெருங்களிப்புடன் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும் தடைபடாத சத்திய சுக பூரணப் பெருவாழ்வு என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.

இது சத்தியம், சத்தியம் சத்தியம்.

நேரிசை வெண்பா

ஏமாந் திருக்கும் எமரங்காள்! இவ்வுலகில்
காமாந்த ராகாத் தரம்பெறவே — காமாந்த
காரத்தை விட்டுக் கருதுமினோ; வித்தருணம்
நேரத்தைச் சேர்வீர் நிசம்.

போற்றி உரைக்கின்றேன்; பொய்யென் றிகழாதீர்!
நாற்றிசைக்கண் வாழும் நமரங்காள்; ஆற்றலருள்!
அப்பன் வருகின்றான் அருள்விளையாட்டாடுதற்கென்
றிப்புவியில் இத்தருணம் இங்கு.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை!

Koviloor Digital Library

நூலகம், கோவிலூர்

4. நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்

---

1. சாதாரண நித்திய கரும விதி

காலைக் கடன்

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து, விபூதி தரித்துச் சிறிது நேரம் உட்கார்ந்து, கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

பின்பு களிப்பாக்கு மிகுதியாகவும், வெற்றிலை சுண்ணும்பு குறைவாகவும் போட்டுக் கொண்டு, முன் ஊறுகிற சலத்தை உமிழ்ந்து, பின் வரும் சலத்தை யெல்லாம் உட்கொள்ள வேண்டும். பின்பு எழுந்து உள்ளே சற்றே சற்றே உலாவுதல் வேண்டும். பின் மல சலம் உபாதிகளைக் கழித்தல் வேண்டும். மலங்கழிக்கின்றபோது, வலக்கையால், இடப் பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். சலங் கழிக்கும்போது, இடக் கையால் வலப் பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். மலமாவது சலமாவது பற்றறக் கழியும்

Koviloor Digital Library

வரையில், வேறு விடயங்களைச் சிறிதும் நினையாமல், மலசல சங்கற்பத்தோடு இருக்க வேண்டும். மலம் பின்னும் தடைபடுமானல், இடப் பக்கமாகச் சற்றே படுத்துப் பிராண வாயுவை வலத்தே வரும்படி செய்துகொண்டு, மல சங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல் வேண்டும். சலம் தடைபட்டால், வலப் பக்கமாகச் சற்றே படுத்துப் பிராணவாயுவை இடப் பக்கம் வரும்படி செய்துகொண்டு, சல சங்கற்பத்தோடு சலவுபாதி கழித்தல் வேண்டும்.

மல சலவாதி கழிந்த பின், செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள் இவைகளை அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கின்ற அசுத்தங்களையும், கை, கால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும் வெந்நீரால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் வேலங் குச்சி, ஆலம் விழுது இவைகளைக் கொண்டு பல்லழுக் கெடுத்து, அதன்பின் கரிசலாங் கண்ணித்தூள்கொண்டு, உள்ளே சிறிது சாரம் போகும்படி பல்லில் தேய்த்து வாயலம்பின பின்பு, பொற்றலைக்கையாந்தகரை இலை அல்லது கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, தூதுளை இலை முசுமுசுக்கை இலை கால்பங்கு, சீரகம்

Koviloor Digital Library

கால் பங்கு இவைகளை ஒன்றாகச் சேர்த்துச் சூரணமாகச் செய்துகொண்டு அதில் ஒரு வராகன் எடையை ஒரு சேர் நல்ல சலத்தில் போட்டு, அதனுடன் ஒரு சேர் பசுவின் பால் விட்டுக் கலந்து அதிலுள்ள ஒரு சேர் சலமும் சுண்டக் காய்ச்சி, இந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிட வேண்டும்.

காலை வெய்யில் கூடாது

காலையில் இளம் வெய்யில் தேகத்தில் படாதபடி பொழுது விடிந்து ஐந்து நாழிகை பரியந்தம் உடம்பைப் போர்வையோடு காத்தல் வேண்டும். பின்பு வெய்யிலில் வெகு நேரம் தேகம் மெலிவு வரத்தக்க உழைப்பை எடுத்துக்கொள்ளாமல், இலேசான முயற்சியில் சிறிது வருத்தந் தோன்ற முயலுதல் வேண்டும். பின் இளவெந்நீரில் குளித்தல் வேண்டும். விபூதி தரித்துச் சிவ சிந்தனையோடு சிறிது நேரம் இருத்தல் வேண்டும்.

பசல் ஆகாரம்

பசி கண்டவுடன், தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரம் கொடுக்கும்போது மிகுந்த ஆலசியமுமாகாது;

Koviloor Digital Library

மிகுந்த தீவிரமும் ஆகாது. முதற் பட்சம் சீரக செம்பா அரிசி, அன்றிப் புன்செய்விளை காரரிசியும் தவிர, நேரிட்ட அரிசியின் வகைகளாகும். அது சாதமாகும்போது அதிக நெகிழ்ச்சியுமாகாது; அதிக கடினமும் ஆகாது. நடுத்தரமாகிய சோற்றை அக்னி அளவுக்கு அதிகப் படாமலும் குறைவு படாமலும் அறிந்து உண்ணுதல் வேண்டும். ஆயினும், ஒரு பிடி குறைந்த பட்சமே நன்மை. போசனம் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல் வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடியா திருத்தல் வேண்டும்.

ஆகார வகை

கிழங்கு வகைகள் உண்ணுமல் இருக்க வேண்டும். அவற்றில் கருணைக்கிழங்கு கொள்ளுதல் கூடும். பழவகைகள் உண்ணுதிருத்தல் வேண்டும். அவற்றில் பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம் இவை நேர்ந்தால் சிறிது கொள்ளுதல்கூடும். பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். பதார்த்தங்களில் புளி மிளகாய் சிறிதே சேர்க்கவேண்டும். மிளகு சீரகம் அதிகமாகச் சேர்க்கவேண்டும்.

KOVILOOR 630 307
Koviloor Digital Library
KARAIKUDI
136846

கடுகு சேர்ப்பது அவசியமன்று. உப்புக் குறைவாகவே சேர்த்துக்கொள்ளல் வேண்டும். அன்றி எந்த வகையிலும் உப்பு மிகுதிக் கொள்ளாமல், உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாகும். தாளிப்பதற்குப் பசு வெண்ணெய் நேரிட்டால் தாளிக்கவேண்டும். நேராத பட்சத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க்கவும் கூடும். வெங்காயம் வெள்ளைப் பூண்டு சிறிதே சேர்க்கவேண்டும். கத்திரிக் காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக் காய், பீர்க்கங்காய், கலியாண பூசனிக்காய், புடலங்காய், தூதுளங்காய், கொத்தவரைக்காய் இவைகள் பதார்த்தம் செய்தல் கூடும். இவற்றினுள் முருங்கை, கத்திரி, தூதுளை, பேயன் வாழைக்காய் இவைகளை அடுத்தடுத்துக் கறி செய்துகொள்ளலாம். மற்றவைகளை ஏகதேசத்தில் செய்துகொள்ளலாம்.

வடை, அதிரசம், தோசை, மோதகம் முதலிய அப்ப வர்க்கங்கள் கொள்வப்படாது. ஏகதேசத்தில் சிறிது கொள்ளவும் கூடும். சர்க்கரைப் பொங்கல், ததியோதனம், புளிச் சாதம் முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப் படாது.

Koviloor Digital Library

புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. கரிசலாங்கண்ணி கீரை, தூதுளங்கீரை, முன்னைக்கீரை, பசலைக் கீரை, முருங்கைக்கீரை, இவைகளைப்பருப்போடு சேர்த்தும் மிளகோடு சேர்த்தும் புளியிட்டுத் தனித்தும் கறிசெய்து கொள்ளல் வேண்டும். மற்றக் கீரைகள் ஏகதேசத்தில் நேரில் சிறிது சேர்த்துக்கொள்ளவும் கூடும்.

புளித்த தயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் முளைகட்டாத துவரம் பருப்பு அல்லது முளைகட்டின துவரம் பருப்பு மிளகு சேர்த்துக் கடைதல், துவட்டல், துவையல் செய்தல், குழம்பிடல் வேறொன்றில் கூட்டல் முதலியன வாகச் செய்து நெய் சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவும் சேர்க்கப்படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமில்லை. ஏக தேசத்தில் நேர்ந்தால் கொள்ளவும் கூடும்.

ஜலம்

சுக்கைச் சுண்ணாம்பு தடவிச் சுட்டு மேலழுக்கைச் சுரண்டிப் போட்டுச் சூரண மாக்கி வைத்துக்கொண்டு நல்ல சலத்தில் கொஞ்சம்போட்டு ஐந்துபங்கில் மூன்று பங்கு நீர்சுண்ட இரண்டு பங்கு நீர் நிற்கக் காய்ச்சி

Koviloor Digital Library

அதைத் தாகம் கொள்ளுதல்வேண்டும். நேராத பட்சத்தில் வெந்நீராவது கொள்ளுதல் வேண்டுமேயன்றிக் குளிர்ந்த சலம் கொள்ளப்படாது. எந்தப் போசனத்திலும் புலால் எந்த விதத்திலும் புசிக்கப்படாது.

எப்படிப்பட்ட போசனமாயினும், சிறிது குறையவே புசித்தல் வேண்டும். எந்தக் காலத்திலும் பசித்தாலல்லது எந்த வகையிலும் போசனம் செய்யப்படாது. வாத பித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கத்தக்க போசனங்களை அறிந்து விடல்வேண்டும். பகலில் நித்திரை கூடாது. பகலில் போசனம் செய்தவுடன் சற்றே படுத்தெழுந்து அல்லது வேறு காரியங்களில் பிரவேசித்தல் கூடாது. ஆயினும், நித்திரைவரும்படி படுத்தல் கூடாது. பகலில் எந்த வகையிலும் நித்திரை ஆகாது. சிறிது படுத்து எழுந்தபின் பாக்கு வெற்றிலையும் குறைவாகவும், சுண்ணும்பு சிறிது அதிகமாகவும் தாம்பூலம் பஞ்சவாசங்களோடு தரித்து முதலில் ஊறிய சலத்தைப் புறத்தில் உமிழ்ந்துவிட்டுப் பின்பு ஊறும் சலத்தை உட்கொள்ளல் வேண்டும். பகற் போசனம் செய்த சுமார் 17½ நாழிகைக்குப் பின்பு, பேயன் வாழைப்

Koviloor Digital Library

பழம், ரஸ்தாளி வாழைப் பழம், பங்காள வாழைப் பழமும் சிறிது சர்க்கரை சேர்த்து நேர்ந்தால் சாப்பிடக்கூடும். காலையில் பால் சாப்பிடும்போது பசி அதிகரித்தால், நெய் சர்க்கரை கலந்து சிறிது சாப்பிடக்கூடும். பகலில் பெண்கள் தேக சம்பந்தம் கூடாது. பகற் போசனம் செய்தபின் சற்றுநேரம் கடவுளைத் தியானித்து இருக்க வேண்டும். அதன்பின் எந்த வேலை செய்யினும், தேக கரணங்களுக்கு நெளிவு உண்டுபண்ணுகிற வேலைகளாகச் செய்யப்படாது. செய்யினும், சிறிது சிறிதாகச் செய்தல் வேண்டும்.

மாலைக்கடன்

சாயங்கால வெய்யில், தேகத்தில் சிறிது படும்படி உலாவுதல் வேண்டும். காற்று மிகுந்த திக்கில் அப்போது உலாவப்படாது. அன்றிக் கடின வெய்யில், பனி, மழை இவைகள் தேகத்திற் பட உலாவப்படாது.

இராத்திரி முன்பங்கில் தேக சுத்திசெய்து, விபூதி தரித்துச் சிவத்தியானஞ் செய்தல், தோத்திரஞ் செய்தல், சாத்திரம் வாசித்தல், உலகியில் விவகாரஞ் செய்தல் இவை முதலியவை கூடும்.

Koviloor Digital Library

பின் போசனஞ் செய்தல் வேண்டும். இராப் போசனம் பகற் போசனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல் வேண்டும். இரவில், தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப்படாது. சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்க வேண்டும். அவை சிறுகத்தரி, முருங்கை, வற்றல் முதலியவை யாம். இரவில் போசனம் செய்தபின்; சிறிது உள்ளே உலாவுதல் வேண்டும். பின்பு சிவத்தியானம் முதலியவை செய்தல் வேண்டும். சுமார் பன்னிரண்டு நாழிகைக்கு மேல் காலைக்குச் சொல்லியபடியாவது, தனித்தாவது பசுவின் பாலை நன்ருகக் காய்ச்சிக் குடித்தல் வேண்டும். பின் சிலநேரஞ் சென்று சுமார் பதினைந்து நாழிகையில் பாக்கும் சுண்ணும்பும் மிகவுங்குறைய, வெற்றிலை மிகவும் அதிகப்படக் கலந்து, பஞ்சவாசத்தோடும் போட்டுக் கொண்டு, முதற் சலத்தை உமிழ்ந்து பின்வருஞ் சலத்தை உட்கொண்டு, திப்பியை உமிழ வேண்டும். மற்ற வேளையும் தாம்பூலத்தின் திப்பியை உமிழுதல் அவசியம்.

நித்திரை

பெண்களுடன் தேக சம்பந்தம் செய்ய வேண்டில், முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்

Koviloor Digital Library

தைச் தேக சம்பந்தத்தில் வையாது, வேறி டத்தில் வைத்துப் பின் சம்பந்தஞ் செய்தற்குத் தொடங்கல் வேண்டும். தொடங்கிய போது அறிவு விகற்பியாமல், மனமுதலிய கரண சுதந்திரத்தோடு தேகத்திலும் கரணங் களிலும் சூடு தோன்ருமல், இடப் புறச்சாய் வாகத் தேக சம்பந்தஞ் செய்தல் வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத் தக்க உபாயத்தோடு தேக சம்பந்தம் செய்தல் வேண்டும். அவ்வுபாயமானது பிராண வாயுவை உள்ளேயும் அடக்காமல், வெளியேயும் விடாமல், நடுவே உலாவச் செய்துகொள்ளுத லாம். ஒரு முறையன்றி, அதன் மேலும் செய்யப்படாது. தேக சம்பந்தஞ் செய்தபின், தேக சுத்திசெய்து, திருநீறணிந்து சிவத்தி யானம் செய்து, பின்பு படுக்கவேண்டும்.

படுக்கும்போது இடப் பக்கமாகவே படுத் தல் வேண்டும். எந்தக் காலத்தில் எது குறித் துப் படுத்தபோதிலும் இடக்கைப் பக்கமாகவே படுத்தல் வேண்டும். பின்பு ஏழரை அல்லது பத்து நாழிகையளவு (மூன்று அல்லது நான்கு மணி நேரம்) நித்திரை செய்தல் வேண்டும்.

Koviloor Digital Library

அதன்பின் விழித்துக்கொண்டு நல்ல சிந்திப் புடனிருத்தல் வேண்டும். இரவில் தேகசம் பந்தம் நான்கு தினத்திற்கொருமுறை செய்தல் அதமபட்சம்; எட்டுத் தினத்திற்கு ஒரு விசை செய்தல் மத்திமபட்சம்; பதினைந்து தினத்திற்கு ஒரு விசை செய்தல் உத்தமபட்சம். அதன் மேற்படில், சுக்கிலம் ஆபாசப்பட்டுத் தானே கழியும். நான்கு தினத்திற் கொரு விசை செய்யில், சுக்கிலம் நெகிழ்ச்சிபட்டுச் சந்தி விருத்தியைக் கெடுக்கும். ஆதலின், அதம பட்சமாயிற்று. இரவில் சொப்பனம் வாராது மிருதுவாகவே நித்திரை செய்து விழித்துக் கொள்ளல் வேண்டும்.

எப்பொழுதும் பயத்தோடிருக்கப்படாது. பரிச்சேத பயம் இல்லாமலும், இருக்கப் படாது. எப்போதும் மன உற்சாகத் தோடிருக்க வேண்டும். கொலை, கோபம், சோம் பல், பொய்ம்மை, பொறாமை, கடுஞ்சொல் முத லியதீமைகள் ஆகா. உரத்துப்பேசல், வேகமாய் நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டை யிடல் கூடா. எந்த விதத்திலும் பிராணவாயு அதிகமாகச் செலவாகாமற்படி, சாக்கிரதை யோடு பழகுதல் வேண்டும்.

Koviloor Digital Library

தலை முழுகுதல்

பொற்றலைக்கையாந்தகரையை உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு, அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு நான்கு நாளைக்கு ஒரு விசை வெந்நீரில் முழுகவேண்டும். அன்றி, வாரத்திற்கு ஒரு விசையாவது முழுகுதல் வேண்டும். தூளில்லாத பட்சத்தில், நல்லெண்ணெயைக் காய்ச்சியே முழுகுதல் வேண்டும். புகைக் குடி, கஞ்சாக்குடி, கள்குடி, சாராயக்குடி முதலிய மயக்கக் குடிகள் ஆகா.

மலசலத்தைச் சிறிதும் அடக்கப்படாது. சுக்கிலத்தைச் சிறிதும் வீணில் விடப்படாது. துன்மார்க்கப் பழக்கஞ் செய்யக்கூடாது.

எந்த வேலை செய்யினும், எந்த விவகாரஞ் செய்யினும், சிவசிந்தனையோடு செய்துபழகுதல் வேண்டும்.

இந்தத் தேகத்தில் புருவமத்தியில் நமது ஆன்ம அறிவென்கின்ற கற்பூரத்தில், கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்துப்பார்த்து, அதில் பழகிப்பழகிக் கடவுளிடத்து உண்மையாகிய அன்பையும் சீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும் இடை

Koviloor Digital Library

விடாமல் வைத்து, ஓங்கார பஞ்சாட்சர ஞாபகம் செய்தல் வேண்டும்! சிவ பஞ்சாட்சர ஞாபகம் செய்தல் வேண்டும்.

2. போது விதி

1. ஆறுமாதம் அல்லது மூன்று மாதத்திற் கொருதரம், வெள்ளைக்காக்கட்டான் முதலானவைகளில் விரேசனம் வாங்கிக்கொள்ளுதல்.

2. நாலுமாதத்திற்கொருதரம்,மருக்காரை முதலியவைகளால் வமனத்திற்கு வாங்கிக் கொள்ளல்.

3. ஒரு வருடத்திற் கொருதரம், முள்ளி முதலானவைகளால் நசியஞ் செய்துகொள்ளல்.

4. நாலு நாளைக்கு ஒருதரம், அத்தி முதலிய வஸ்துக்களால் செய்வகைப்படி செய்த மைகளால் கண்ணுக்கு அஞ்சனந் தீட்டல்.

5. ஒரு பட்சம் அல்லது ஒரு வார வட்டத்திற்கு ஒருதரம், சாவதானமாக நல் நினைப்போடு மூச்சு அதிர்ந்து மேலிடாது, மெல்லெனப் பெண்போகம் செய்தல் (இது விருத்தர்களுக்கு விதித்ததன்று.)

6. வாரவட்டம் அல்லது நாலு தினத்திற் கொருதரம் முலைப்பால் பொன்னுங்கண்ணி

Koviloor Digital Library

முதலிய தைல மிட்டுக்கொண்டு செம்பாகமான வெந்நீரில் மெல்லென முழுகல்.

7. இளவெய்யில், கடுவெய்யில், மழை, குளிர் காற்று, பனி இவைகளால் உடம்பை வருத்தாமற் காத்துக்கொள்ளுதல்.

8. கடுநடை, ஓட்டம், பெருஞ்சொல், பேரோசை, இசை பாடுதல், வழக்காடுதல், பெருநினைப்பு, பெருஞ்சிரிப்பு, பெருந்துயர், மிகுபார்வை, ஊன்றிக் கேட்டல், துர்க்கந்த நற்கந்த முகர்தல், சுவை விரும்பல், பேருண்டி, பெருந்தூக்கம், வீண் செயல், பெரு முயற்சி, விளையாட்டு. மல மடக்கல், சல மடக்கல், தாக மடக்கல், பெரு நீர் குடித்தல், சயன வுணர்ச்சி, பயம், அகங்காரம், இடம்பம், பேராசை, உலோபம், கோபம், மோகம், மதம் இவை முதலியவை தேகேந்திரிய கரண குற்றங்களடையா திருத்தல்.

9. பழஞ் சோறு, பழங்கறி, எருமைப்பால், எருமைத் தயிர், மோர், நெய், செம்மறிப் பால், தயிர், மோர், நெய், கேழ்வரகு, வரகு, தினை, சாமை, பருப்புவகை, அதிரசம், அப்பம், சுகியம், முதலிய சிற்றுண்டி ; தயிர்ச்சோறு, புளிச் சோறு முதலிய சித்திரான்னம் ; காரரிசிச்

Koviloor Digital Library

சோறு, முளைக்கீரை, அகத்திக் கீரை, முன்னை முதலான இலைக் கறி, சுரை, பூசனை, பறங்கி, பீர்க்கு, புடல், பாகல், கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை, கள், சாராயம், கஞ்சா, புலால், மாமிசம் முதலிய விலக்குகளை நீக்கி, விதித்தவைகளை யனுசரித்தல்.

3. சிறப்பு விதி

1. நித்தியம் சூரியோதயமாக ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை நீங்கி யெழுந்திருத்தல்.

2. எழுந்தவுடன் விபூதி தரித்துச் சற்று நேரம் செவ்வையாக உட்கார்ந்து, கடவுளை யூன்றி நினைத்து எழுதல்.

3. அங்ஙனம் எழுந்து, சிறிதும் தாமதியாமல், மவுனமாகச் சிறிது தூரம் நடந்து, எவ்விடத்தில் மலசல உபாதி நேரிடுகிறதோ, அவ்விடத்தில் அப்பொழுதே ஒன்றுஞ் சேட்டையில்லாமல், விரைவில்லாமல் இருந்து அறவிடுதல்.

4. பொற்றலைக்கையாந்தகரை, கரிசலாங் கண்ணி இவைகளில் ஒன்றுகொண்டு, உள்ளே சிறிது சாரம் போகவும், கபநீர் பித்தநீர் வெளியாகவும் தந்த சுத்தி செய்தல்.

Koviloor Digital Library

5. பின்பு, திருநீறு தரித்துக்கொண்டு, ஏகாந்தமாக ஓரிடம் பற்றியிருந்து, சூரியன் உதயமாகிற வரையில் கடவுளைத் தியானஞ் செய்துகொண்டிருத்தல்.

6. உதயந் தொடங்கிச் சுமார் சாம பரியந்தம் தக்கமுயற்சியோடு பழகுதல்.

7. காலையில் உண்ணமல், சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணுதல்.

8. காலையில் சூரியோதய மானவுடன் தூதுளை, பொன்னாங்கண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக்கையாந்தகரை, புளியாரை, வல்லாரை, நன்னரி, கடுக்காய், மிளகு, அறுகம் வேர் இவைகளில் யாதாயினும் ஒன்றைப் பசுப்பாலிற் சுத்திசெய்து சூரணமாக்கிக் கொண்டு, சர்க்கரையிற் கலந்தாவது, அல்லது சூரணமாகவாவது பசுப்பாலில் அனுபானித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல்.

9. சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணத் தொடங்கும்போது முன் புசித்த போசன முழுதுஞ் சீரணித்ததை நன்றாயூன்றி யறிந்து, பின்பு சீரணித்த அக்கணமே, விருப்பாய் ஏறுமலும், வெறுப்பால் குறையாமலும், தராசு

Koviloor Digital Library

முனைபோல் அளவறிந்து, அந்த அளவின்படி, அதிக விரைவும், அதிக தாமதமு மில்லாதபடி, சமமாகப் புசித்தல்.

10. புசிப்பில் பச்சரிசிச்சாதம், பசுப்பால், பசு நெய், முருங்கை, கத்தரி, முள்ளி, தூதுளை முதலிய இளங்காய், பொன்னாங்கண்ணி, முதலிய இளங்கீரை இவைகளில் மிளகு ஒரு பங்கு, சீரகம் காலே அரைக்காற் பங்கு, வெந்தயம் காற் பங்கு, புளி வீசம் பங்கு, உப்பு வீசம் பங்கு, மிளகாய் வீசம் பங்கு, சேர்க்கப்பட்ட கறியமுது, குழம்பு, இரசம் முதலானவைகளைக் கொண்டு பெருங்காயம், வெங்காயம், வெள்ளைப் பூண்டு முதலானவைகளைத் தள்ளிப் புசித்தல்.

KOVILOO[illegible] MADALAYAM
KOVILUR-630 307
MANACHAI VIA

11. புசித்தபின்பு, மத்தியானந் தொடங்கி இருபத்தைந்து நாழிகை பரியந்தம், சத்துவமான விவகாரங்களை மெல்லென இருந்தபடி நடத்தல், பிறர்க்கு விசேடங் கேளாவகை படித்தல், மெல்லெனப் பேசல் இவையன்றி நல்ல் நினைப்போடிருத்தல்.

12. காலை, மத்தியானம், சாயங்காலம் இப்பொழுதுகளிலும் மத்தியிலும் நித்திரை செய்யாதிருத்தல்.

Koviloor Digital Library

13. மத்தியான போசனம் செய்கிற பொழுது அடிக்கடி தாகநீர் குடியாமல், போசனஞ் செய்த பின்பு, ஒருதரமாக இளஞ்சூடுள்ள வெந்நீரைக் கிரமமாகத் தாகத்துக்குக் கொண்டு, குளிர்ந்தசலம் சிறிதும் கொள்ளாது தள்ளுதல்.

14. மத்தியானத்தில்சுமார் ஐந்து நாழிகை பரியந்தஞ் செவ்வையாக ஓரிடத்தில் இருந்து, மனத்தை ஒரு வழிப்படுத்தித் தெய்வ சிந்தனை யோடிருத்தல்.

15 காலைப் புணர்ச்சி, பகற் புணர்ச்சி, அந்திப் புணர்ச்சி, இரவு முன்பங்கு புணர்ச்சி, காலைப்போசனம், அந்திப் போசன முதலானவை இல்லாதிருத்தல்.

16. சாயங்காலத்திலும் ஐந்து நாழிகை யாதொரு முயற்சியுமில்லாமல், ஓரிடத்திலசை யாதிருந்து தியானித்தல்.

17. இரவில் பத்து நாழிகைக்குள் மத்தியான போசனத்துக்கு அரைத்தரமாகப் புசித்தல்.

18. அதற்குமேல் இராத்திரி பதினைந்து நாழிகை பரியந்தம் மனத்தையடக்கித் தியானித்திருத்தல்.

Koviloor Digital Library

19. பதினைந்து நாழிகை தொட்டு இருபத்திரண்டரை நாழிகை பரியந்தம் மெல்லனத் தூங்கல்.

20. படுத்து விழிக்கிறபரியந்தம், இடக்கை கீழிருக்கச் செய்தல்.

21. ஆகாரம் அரை; நித்திரை அரைக்கால்; மைதுனம் வீசம்; பயம் பூச்சியம்; ஆகப் பெறுதல்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை !

Koviloor Digital Library

5. உபதேசம்

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரையில் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக்கொண்டிராதீர்கள்.

இது முதல், சாலைக்கு ஆண்டவர் போகிற பத்துத் தினமாகிய கொஞ்சக் காலம் வரையில், நீங்களெல்லவரும் நல்ல விசாரணையில் இருந்துகொண்டிருங்கள். அந்த விசாரணை எது என்றால், "நம் நம்முடைய நிலை யெப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிட்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை யெப்படிப் பட்டது?" என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாகவாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது, அல்லது வேலாயுத முதலியாரைக் கேட்டால், மனுஷ்யதரத்தில் போதுமான வரையில் சொல்லுவார். அவரிடம் அப்படிக் கேட்டாவது நல்ல விசாரணையிலிருங்கள்.

Koviloor Digital Library

இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாயிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்டதென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்கவேண்டுமெனத் தோத்தரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை உன்னியும், இவ்வண்ணமாக இருக்கின்றபோதும், படுக்கின்றபோதும், இடைவிடாதும் இவ்விசாரத்தோடும், ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்கவேண்டு மென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரியவேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம், பரம், அபரம் என்று இரண்டு வகையாயிருக்கின்றது. இவற்றில் பரம், பரலோக விசாரம்; அபரம், இகலோக விசாரம். இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமன்று. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்துகொண்டிருக்கின்றானே யென்றால்,

Koviloor Digital Library

அவ்விசாரம் விசாரமாகாது. உண்மை விசாரமுமன்று. ஏனெனில், விசார மென்கின்றதற்குப் பொருள், வி + சாரம் என்பதில் வி சா்தாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது. அது மேலும், பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. மேலும், சலத்திலிருக்கின்ற பாசியை நீக்குவது போல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத்திரையாகிய இராகாதிகளை, விசார அதியுஷ்ணத்தாலல்லது, அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டுபண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட, ஆண்டவரைத் தோத்திரம் செய்கின்றதிலும், தெய்வத்தை நினைக்கின்றதிலும், அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள், வனம், மலை, முழை முதலியவைகளில் போய், நூறு, ஆயிரம் முதலிய வருடகாலம் தவஞ் செய்து, இவ்வுஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள்.

இப்படித் தவஞ்செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தைத் தோத்திரம் செய்கின்றதிலும், நினைக்கின்றதிலும், இதைவிடக் கோடிப்பங்கு, பத்துக்கோடிப் பங்கு, அதிக

Koviloor Digital Library

மாக உஷ்ணம் உண்டுபண்ணிக்கொள்ளலாம். எவ்வாறெனில், ஒரு சாமநேரம், மனத்தில் இக விசார மன்னியில் பர விசாரிப்பும், அத்துடன் ஆன்ம நெகிழ்ச்சியுடன் தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது, அல்லது தோத்திரம் செய்துகொண்டாவதிருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆதலால், இவ்வுலகில் வி + சாரம் என்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்கமென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணப்படாது. அவர்கள் பண்ணுகின்றது, துக்கமே விசாரமென்பது; அது தப்பு. சாரம் என்றால் துக்கம். விசாரம்—என்றால் துக்க நிவர்த்தி. வி — உபசர்க்கம். சாரமென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசாரமென்கின்றது முன் குறித்தபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால், இடைவிடாது விசார வசத்தராயிருக்கவேண்டும். மேலும் விசாரம் என்பது வி=விபத்து; சாரம்=நீக்குதல், நடத்தல். ஆதலால், இடைவிடாது நன் முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும். மேலும், சிலர், "இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்

Koviloor Digital Library

டவர் வந்தவுடனே பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம் இஃது, தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது சத்தியந்தான். நம்மவர்களின் திரை நீங்கப்போகின்றதும் சத்தியந்தான். நீங்கள் எல்லோரும் பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகின்றதும் சத்தியந்தான். ஆனல். முன் சொன்ன பச்சைத் திரை இரண்டு கூறாக இருக்கின்றது. யாவெனில், அசுத்த மாயா திரையென்றும், சுத்த மாயா திரையென்றும் இரண்டு. இவை, கீழ்ப்பாகத்தில் ஒரு கூறும், மேல் பாகத்தில் ஒரு கூறும் இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்த மாயா திரை. மேல் பாகத்தில் உள்ளது சுத்த மாயா திரை, இவற்றில் அசுத்த மாயா திரை, இக லோக போகலட்சியமுடையது. சுத்த மாயா திரை பரலோக சத்தியத்தை யுடையது. இவற்றில் ஆண்டவர் வந்து சாதாரணமாக அனுக்கிரகஞ் செய்கின்றபோது, முயற்சியில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்தமாயை யென்னும் பச்சைத் திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், கூடியவரையில் அக்காலத்தில் நாம், அத்திரை நீங்கியவுடன் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்க

Koviloor Digital Library

லாமேயல்லது, பெறவேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகிறதற்குக் கூடாது. மேலும், பஞ்ச கிர்த்திய விபவங்களும், இதர சித்தி முதலியவை யும், ஆன்மானுபவத்தையும், செய்யவும் பெற வும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேற வேண்டியது.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல் முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும், பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால், நாம் எல்லவரும் இத் தருணம், இப்பொழுதே, விசேட நன்முயற்சி யுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது நம் கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்த மாயாதிரை யோடு கூடி மேற் பாகத்திலிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத்திரையும் நீங்கிப் போய்விடும். கருமையிற் பச்சை வர்ணமுடை யது. அசுத்த மாயாதிரை பொன்மையிற் பச்சை வர்ண முடையது. சுத்த மாயாதிரை கருமையிற் பச்சை வர்ணமுடைய அசுத்த மாயாதிரை நீங்கின பிறகு, மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். இத் திரை களின் விவரத்தை, ஆறுவது திருமுறை அருட் பெருஞ் சோதி அகவலில் கண்டுணர்க. மேலும்,

Koviloor Digital Library

இது நீங்கினவுடனே, அவன் பஞ்சகிர்த்திய முதலானதுஞ் செய்வான். ஆதலால், முயற்சி யுடனே இருந்தால் அதற்குத் தக்க லாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமுங், பார்த்தும், கேட்டும், லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்கவேண்டா. ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி அன்னியில், தெய்வத்தை இன்ன படி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவி யச் சொல்லாமல், பிண்ட லட்சணத்தை அண் டத்தில் காட்டினார்கள். யாவெனில், கைலாச பதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்திய லோகாதிபதி என்றும், பெயரிட்டு, இடம், வாக னம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும், ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லி யிருக்கின்றார்கள். "தெய்வத்துக்குக் கை கால் முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்களுக் குப் பதில் சொல்லத் தெரியாமல் விழிக் கின்றார்கள். இஃது உண்மையாக இருப்ப

Koviloor Digital Library
KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307

தாகவே, முன்னும் பின்னும் உள்ள பெரியவர் களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும், உண்மையை யறியாது, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால். ஆதியிலே இதை மறைத்தவன் ஒரு வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக் கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில், ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லி யிருக்கின்றார்கள். அதற்காக ஒவ் வொரு சித்திக்குப் பத்து வருடம், எட்டு வருடம் பிரயாசை எடுத்துக்கொண்டால், அற்ப சித்தி களை அடையலாம். அதற்காக அவற்றில் லட்சி யம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக் கொண்டிருக்கிற லட்சியம் போய்விடும்.

ஆண்டவரிடத்தில் வைத்த லட்சியம் போய் விட்டால். நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோசனம் போய்விடும். அல்லது எதில் முயற்சி செய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப் பிரயோசனத்தைத் தெரிந்து கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம்

Koviloor Digital Library

அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லட்சியம் வைக்காமல், ஆண்டவரிடத்திலேயே லட்சியம் வைக்க வேண்டியது. முன்சொன்ன ஏகதேச சித்தி கற்பனை யென்கின்றது, நான் செய்த வாசகப் பெரு விண்ணப்பத்தாலும்,

இயல்வேதா கமங்கள்பு ராணங்க ளிதிகாசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்;
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்;
"மகனே! நீ நூலனைத்துஞ் சாலமென அறிக!
செயலனைத்தும் அருளொளியாற் காண்"வெனஎனக்கே
திடவுளம்பற் றியஞான தேசிகமா மணியே!
அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசே! வென் அலங்கலணிந் தருளே.

என்ற அருள் விளக்க மலைப் பாசுரத்தாலு முணர்க. மேலும், அதிற்கண்ட குறிப்பைத் தெரிந்துகொள்ளுங்கள்.

இதுபோல், வியாகரணம், தொல்காப் பியம், பாணினீயம், முதலியவைகளில் சொல்லி யிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற் றமே. அவைகளில் குற்றமே சொல்லி யிருக் கின்றார்கள். எவ்வாறெனில், தொண்ணூறு, தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின்

Koviloor Digital Library

உண்மை, நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று, இரண்டு முதல், நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல் + நூறு தொண்ணூறென்றும், தொல் + ஆயிரம் தொள்ளாயிர மென்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொக்கியது. தொன்மை தொல்லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்தமுன் ஆயிரமென்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால், சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல் சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும், லட்சியம் வைக்க வேண்டா. அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூவுக் குறியாகக் குறித்திருக்கிறதே யன்றிப் புறங் கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால்,

Koviloor Digital Library

அவற்றில் லட்சியம் வைக்கவேண்டா. ஏனெனில், அவைகளில், அவ்வச்சமய மதங்களிலும் அற்பப் பிரயோசனம் பெற்றுக்கொள்ளக் கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றதற்கு முடியாது. ஏனெனில், நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக் கெல்லாம் சாட்சி, நானேயிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவென்று, அளவு சொல்ல முடியாது. அது பட்டினத்துச் சுவாமிகளுக்கும், வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லட்சியம் இப்போது எப்படிப் போய்விட்டது? பார்த்தீர்களா? அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருக்கின்ற பாடலையும், மற்றவர்கள் பாடலையும், சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

Koviloor Digital Library

இப்போது ஆண்டவர் என்னை ஏருத நிலை மையிலேற்றி யிருக்கின்ருர். இப்போது எல்லா வற்றையும் விட்டுவிட்டதினுல் வந்த லாபம் இது. ஆதலால், நீங்களும் விட்டுவிட்டீர்களானுல், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக்கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக்கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லட்சியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்டதென்ருலோ, அந்த லட்சியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்திற்குத் தூக்கிவிட்டது யாதெனில், அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தா ரென்று வாசகப் பெருவிண்ணப்பத்திலும் ''எத்தேவரையும்நின் சாயையாய்ப் பார்த்ததே யன்றித் தலைவ வேறெண்ணிய துண்டோ'' எனவும் "தேடிய துண்டு நினதுருவுண்மை'' என்னும் தொடக்க முடைய பதிகத்திலும் விண்ணப்பித் திருக்கின்றேன். மேலும், அவர்தெரிவித்தஉண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில்: "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக" என்றதுதான். என்னை ஏருநிலைமிசை யேற்றி விட்டது யாதெனில், தயவு. தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

Koviloor Digital Library

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும் அந்த ஒருமை இருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாக எப்படியிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து சொல்லுவேன்; அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படியெந்த விதத்திலேயாவது நல்வழிக்குவரச் செய்துவிடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும். இராத்திரி கூட "நான் இல்லாமல் இந்த சனங்கள் க்ஷணநேரம் இருக்கமாட்டார்கள்" என்று ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற சனங்கள் மட்டில் மாத்திரமல்லர். உலகத்திலிருக்கிற எல்லாச் சனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக்கொண்டேன். ஏனெனில், எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கை யுண்மை

Koviloor Digital Library

யேகதேசங்களாதலாலும், ஆன்மநேயஒருமைப் பாட்டுரிமை வைத்துக்கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள் இதுவரைக்கும் ஒழுக் கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ் யர்களா யிருந்தாலும், சாலைக்குப் போகக் கொஞ்ச தின மிருக்கின்றது. அதற்குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவ தோடு மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து, நம் மவர்களாக்கிக் கொள்ளவேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்துகொண் டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ் வுலகத்திலுள்ள எல்லாச் சீவர்களும் நன்மை யடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்துகொண்டிருங்கள்.

சமயந்தவிர மதங்களில் உள்ள வேதாந்தி, சித்தாந்தியென்று பெயரிட்டுக்கொண்ட பெரி யவர்களும் உண்மையறியாது, சமயவாதிகளைப் போலவே ஒன்றுகிடக்க ஒன்றை உளறுகிறார் கள். ஆனதினால், நீங்கள் அவைது ஒன்றையும் நம்பவேண்டா. எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. "தெய்

Koviloor Digital Library

வத்தைத் தெரிந்துகொள்ளாது, இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்துகொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப் பட்டுக்கொண்டே இருந்தேன்; இருக்கின்றேன்; இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ளவில்லை யென்றால், ஒரு பதார்த்தத்தை அனுபவித்தா லல்லது, அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின்மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தா லல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற முக்கிய லட்சியத்தில் இருந்துகொண்டு விசாரஞ் செய்துகொண்டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படி யென்றால், அண்டத்தில் சூரியன் சந்திரன் நட்சித்திரங்கள், இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும்; பிண்டத்தில் நாம் யார்? இத்தேகத்தின்கண் புருவம்

Koviloor Digital Library

கம்மூலம், இவைகளிலும், இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றா திருப்பதென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும், அந் நகம் வளர்தலும், இவைபோன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் விசாரமுஞ் செய்துகொண்டிருங்கள். இப்படி இடைவிடாது விசாரஞ் செய்துகொண்டிருந்தால், இவ்வுலகத்தின்கண் உள்ள சனங்கள் அதைக் குறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால், நீங்கள் அதை லட்சியம் செய்யக் கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்துவர விடுத்தவர், ஆணுக்குக் கடுக்கனிடுதலும், பெண்ணுக்கு மூக்குத்தி முதலியன்வ போடுதலும், தமக்குச் சம்மதமானால், காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா?" என்று விசாரித்துத் தெரிந்துகொள்ளுகிற பட்சத்தில், காதில் கடுக்கனிடவும், மூக்கு முதலியவற்றில்

Koviloor Digital Library

நகையிடவும் சம்மதம் வருமா ? இப்படி விசா ரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலட்சியம் தோன்றினல், நிராசை உண்டாம். ஆதலால், சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில், சரியை, கிரியை, யோகம், ஞானம், என்கின்ற நான்கில், மூன்ருவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனுகிய நிராசை யென்னும் படி உண்டாகின்றது. ஆகை யினுலே, இந்த விசாரத்தி லிருந்துகொண் டிருங்கள்.

இவ்விசாரஞ் செய்துகொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே, கண்டமாக உங்களுக் குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங்களுக்கு உரிமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால், நீங்கள் இந்த முயற்சியிலிருங்கள். இரண்டரை வருடமாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கள் சிலநாள் தடைபட்டிருப் பார்கள். இனி நீங்கள் இதுவரைக்கும் இருந் ததுபோல் இராதீர்கள்,

இது கடைசி வார்த்தை

இதுமுதல், கொஞ்சகாலம் சாலேக்குப் போகின்ற வரைக்கும், சாக்கிரதையாக மேற்

KOVILOOR VADALAYAM
Koviloor Digital Library
KOVILOOR - 630 307
(PHONE : 430349)

சொன்ன பிரகாரம் விசாரஞ் செய்துகொண்டிருங்கள்.

மேலும், சமயமதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூஉக் குறியால் குறித்து, அக் குறிப்பையும் வெளிப்படையாகக் காட்டாது, சிவாயநம என்றும், நமசிவாய என்னும், இதுபோன்ற அனந்த வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பதின்மூன்று, பதினைந்து பதினாறு, இருபத்து நான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வருகின்றது, அவ்வம் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால், நாம் அடையவேண்டுவது முடிவான ஆன்ம லாபமாகிய சிவானுபவமே யன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்க நரக விசாரமில்லை. சுவர்க்க நரக விசாரமுள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து அற்பப் பிரயோசனத்தைப் பெற்று, முடிவில் தடைபட்டுத் திருவருட்டுணையால் கருணை நன்முயற்சி யெடுத்துக்கொண்டு, பின், முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

Koviloor Digital Library

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகா வாக்கியத் திருமந்திரத்தை (தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை) என்க்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய் யறிவின்கண் அனுபவித் தெழுந்த உண்மையறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய, என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில், நமக்கு முன், சாதனம் கருணை யானதினலே, ஆண்டவர் முதற் சாதனமாக,

அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் சோதி

என்னும் திருமந்திரத்தை, வெளிப்படையாக எடுத்துக்கொண்டார். தயவு, கருணை, அருள், என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால், பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாகும். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய

Koviloor Digital Library

பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ் வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன் பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்த தமும் வேதமொழி யாதொன்று பற்றின் அது தான் வந்து முற்றும்" என்னும் பிரமாணத் தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண் மையைத் தெரியவொட்டாது, அசுத்தமாயா காரிகளாய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும், கேட்டறியாத கேள்வியும், நாம் கேட்டிருப் போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய் தது இத்தருணமே. ஆதலால், இத்தருணம் இக்காலமே சன்மார்க்கக் காலம். இதற்குச் சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக்கொண்டது. அக்கொடி இப் போதுதான் கட்டிக்கொண்டது அக் கொடி உண்மையில் யாதெனில், நமது நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி இருக்கின்றது.

Koviloor Digital Library

அந்த நாடிநுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஒரு சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச் சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக்கொடி நம் அனுபவத்தின் கண்விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடிகட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடி கட்டிக்கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்துகொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார்; தெரிவிக்கின்றார்; தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள். இப்போது நான் சொல்லிவந்த பிரகாரம் சாக்கிரதையுடன் உண்மை யறிவாய் விசாரம் செய்து கொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரண

Koviloor Digital Library

மான தயவிருக்க வேண்டியது. அத்தயவு வருவதற்கு ஏதுவான பொது உரிமையுங்கூட இருக்க வேண்டும். இப்படி இருந்துகொண் டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக்கொள்வீர்கள். எல்லோருக்கும், தாய், தந்தை, அண்ணன், தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப்பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம்.

இது சத்தியம்; சத்தியம்; இஃது ஆண்டவர் கட்டளை.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை!

Koviloor Digital Library

குறிப்புரை

1. திருவருளை எவ்வாறு பெறக்கூடும்?

திருவருள் = கடவுள் திருவருள். ஆன்ம அறிவு = சீவன் அறியும் அறிவு, தத்துவத்திறுக்கு = பொருளுக்கு வேதம் + ஆகமம், வேதம் = சமய முதல் நூல், ஆகமம் = தருமநூல்; உண்மை அனுபவம் பெற்ற உத்தமர்களால் மற்றவர்களுக்கு உபதேசமுறையாலே கூறப்பட்டவாக்கியங் கள்: மேலும் சிவபெருமானாலும் திருமாலாலும் ஆன்ம லாபத்தை அடைதற்குரிய சாதனங்களை விரிவாக எடுத்துக் கூறும்வேத முறையைப் பின்பற்றிய வாக்கியங்கள் என்றும் கூறலாம். கலைகளை = சாஸ்திரங்களை, ஆதிகளை = முதலிய வற்றை, பிண்ட அண்டம் = நுண்ணுடல் உருவங்கள், திருப் பணி = தொண்டுகள்.

வாக்கு = வார்த்தை, காயம் = உடல், பான் + தாரம் = அன்னியனுடைய மனைவி, கமனம் பண்ண = சென்று இன்பம் அனுபவிக்க, புறங்கூறல் = கண்டபோது இனிமையாகப் பேசிக் காணாதபோது இழிவாகப் பேசுதல், இம்சை = தீங்கு, சொல்லாடல் = பேசுதல், கிருத்தியங் கள் = செயல்கள். அபிமானம் = ஆசை, செருக்கு = கர்வம், உடன்பாடு = இசைவு, (ஒப்புக்கொள்ளுதல்) பச்சாத் தாபப்பட்டு = மிகவும் இரக்கப்பட்டு, நியமனம் = கட்டளை

Koviloor Digital Library

பிராயசித்தம் = நிவர்த்திக்கும் வழிகள், அன்னவிரயம் = அன்னதானம், வார்த்திகர்களாய் = கிழவர்களாய், சயன காலம் = தூங்கும்வேளை, பாராயணத்தாலும் = அருள் நூல்களை (தேவார, திருவாசகம் முதலான நூல்கள்) நியம மாக ஓதுதலாலும், விருந்து = புதியவர்களாக வந்தவர்கள், பாரவல் = வணங்குதல், சண்டாளாதி = ஒழுக்கம் தவறிய பிறப்பு முதலான, வேதாந்திகள் = நாமே பிரம்மம் என்னும் கொள்கையுடையவர்கள், ஏதுக்கள் = காரணங்கள், சர்வ சாட்சி = முழுவதையும் நேரில் கண்டவர், வாசனை = ஆசை, இந்திரிய வாசனை = ஐம்புலன்களின் வழியில் வைத்தபற்று, கரண வாசனை = மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய நால்வகைக் கரணங்களில் வைத்த பற்று, சலித்தும் = வெறுத்தும், நிவாத = தூண்டப்படாத. ஜீவன்முத்தர்கள் = இப்பிறவியிலேயேமோட்சத்தை அடைந்தவர்கள்—அதாவது உடலோடு உயிர்கலந்து வாழ்கின்ற நிலையில் விடுதலை பெற்ற வர்கள், சமூகத்தில் = முன்னிலையில், சித்தர்கள் = அருள் அடைந்தவர்கள், பவுதிகம் = மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயமாகிய ஐம்பெரும்பூதசம்பந்த முடையது, தத்துவம் = கருவிகள், தாத்விகங்கள் = கருவிகளின் செயல்கள், தந்த படங்கள் = எரிந்த ஆடை.

2. வந்தன முறை

நிர்அகங்காரம் = கர்வம் இல்லாமை, மும்மலம் = மூன்று குற்றம்: அவை, ஆணவம், கன்மம், மாயை, அதம பட்சம் = கடைசிப்பட்சம், ஆத்மவிளக்கம் = ஆன்மாவின் இயற்கை விளங்குதல், கிரகித்து = வலித்து, நிர்மல = குற்ற மற்ற, ரகிதம் = நீக்கம், ஞானிகள்மாட்டு = ஞானிகளிடத்

Koviloor Digital Library

தில், மதம் + அதீதம் = மதத்தைக் கடந்தவர், உலகத்தின் கண் = உலகத்தில், பதி = கடவுள், தூலம் = பருமை, சூக்குமம் = நுண்மை, ஏகதேசங்கள் = சிறுபான்மை, இரண்டு அற்று = ஒன்றாக, அத்துவிதம் = இரண்டற்ற நிலையில், சகிதம் = சேர்க்கை, சங்கல்பம் = கொள்கை.

பரமசிவம் சுப்பிரமணியசுவாமியிடம் அநுக்கிரகம் பெற்றது :— ஒரு முறை பிரம தேவன் சிவபெருமானைப் பார்க்கக் கயிலாயம் வந்தான். வரும் வழியில் முருகப் பெருமான் விளையாடிக்கொண்டிருக்கையில், முருகப் பெருமான் பிரமனைப் பார்த்து, 'நீ யாவன்?' என்று கேட்டார். பிரமன், தான் உலகங்களைப் படைக்கும் பிரமதேவன் என்று கூறினான். அப்போது முருகப் பெருமான், 'உலகங்களை நீ எப்படிப் படைக்கிறாய்?' என்று கேட்கப் பிரமன் "நான் 'ஓம்' என்று கூறி, வேதத்தை ஆரம்பித்து உலகங்களைப் படைக்கிறேன்." என்று கூறினான். முருகப்பெருமான் உடனே பிரமனை நோக்கி, ''ஓம்' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? கூறுக' என்று கேட்டார். அதற்குப் பொருள்தெரியாமல் பிரமன் விழித்தான். "பொருள் தெரியாமல் வேதம் சொல்லுதலில் பயன் இல்லை" என்று பிரமனைச் சிறையில் அடைத்தார். இதை அறிந்த சிவபெருமான் முருகப் பெருமானிடத்தில் வந்து விசாரித்து, முருகனையே நோக்கி, "உனக்கு 'ஓம்' என்னும் சொல்லுக்குப் பொருள் தெரியுமோ?" என்றபோது, முருகப்பெருமான் "தெரியும்" என்று விடை அளித்தார். "அப்படியானால் சொல்லுக" என்று கேட்டபோது, முருகப்பெருமான் "நீர் எனக்குச் சீடராகவும், நான் குருவாகவும் இருந்து கூறவேண்டும்" என்று கூற, அவ்வாறே சிவபெருமான் சீடராகவும், முரு

Koviloor Digital Library

கப்பெருமான் குருவாகவும் இருக்க "ஓம்" என்னும் பொருளை உபதேசிக்கப்பெற்றார். இதுவே சிவபெருமான் முருகப் பெருமானிடம் அனுக்கிரகம் பெற்ற வரலாறாகும்.

திருஞானசம்பந்தரைத் தாய்தந்தையர் வணங்கியது:— திருஞானசம்பந்தர் சீர்காழியில் பிறந்து, பார்வதிதேவியாரால் ஞானப்பால் உண்டு, எதையும் படிக்காமலே எல்லா ஞானங்களையும் மூன்று வயதில் கைவரப்பெற்றுப் பேர் அறிவு படைத்துக் கடவுளை நேரே கண்டு பல அற்புதங்களைச் செய்தவர். இதனால் இவரது தெய்வீக நிலையைக்கண்டு பெற்றோர் இவரை வணங்கினர்.

அப்பர்சுவாமிகள் திருஞானசம்பந்தரை வணங்கியது— அப்பர் சுவாமிகள்தாம் திருநாவுக்கரசர். இவர் வயதில் மிகவும் முதிர்ந்தவர். ஞானசம்பந்தர் வயதில் மிகஇளைஞர், என்றாலும், திருஞானசம்பந்தர் இறைவரால் கொடுக்கப்பட்ட பல்லக்கில் ஏறிக்கொண்டு தம்மைத்தேடி வருவதை அறிந்த அப்பர், ஒருவரும் அறியாதபடி தாமும் திருஞானசம்பந்தர் பல்லக்கைச் சுமந்து வந்து, திருஞான சம்பந்தரை வணங்கினார். இஃது அன்பினால் செய்த செயலாகும்.

3. மெய்ம் மொழியும் ஒழுக்கமும்

தத்துவங்கள் = கருவிகள், தத்துவிகள் = கருவிகளின் செயல்கள், அறிஞர்கள்; ஒருவாற்றாலும் = எந்தவிதத்தாலும், அகம் = உள், புறம் = வெளி, மார்க்கம் = வழி, அவத்தை = வேதனை ; வசத்தவர் = உள்ளானவர் ; லட்சியம் = குறிக்கோள். சுப் = நல்ல, நெறி = வழி, சுத்த சன்மார்க்கம் = தூய்மையான ஞானவழி, வள்ளலார் சென்னையில் இருந்து ஒரு பெரிய நிலைக்கண்ணாடியை வரவழைத்தார். அதனைச்

Koviloor Digital Library

சித்திவளாகம் என்று பெயர் இட்ட மேட்டுக்குப்பத்தில் (வடலூரில் உள்ளது) தம் சிறு குடிசையில் ஒரு மண்டலம் வைத்து வழிபாடு செய்த பிறகு, அக்கண்ணாடியையும், ஒரு திருவிளக்கையும் சபாபதி சிவாசாரியரைக் கொண்டு ஞான சபையில் (வடலூரில் உள்ளது) தாபிக்கும்படி கூறினர். அவரும் அங்ஙனம் செய்து வழிபாடு செய்து வருவாராஞர். அதுவே சித்திவளாகம் என்பது. சித்தி = மோட்சம், வளாகம் = இடம். ஆகவே மோட்சம் அடைதற்கு இட மாய் உள்ளது என்பதாம். உத்தரஞான சிதம்பரம்=தெற்கே ஒரு சிதம்பரம் இருத்தலின், வடலூரில் வள்ளலார் அமைத்த சிதம்பரத்தினை உத்தரஞான சிதம்பரம் என்ற பெயரால் அழைத்தனர், உத்தரம்=வடக்கு, சித்திகள் = வன்மைகள், அருட்பிரகாச வள்ளலார் = இறைவர், சிவபெருமான், பல் லாற்ருனும் = பலவழிகளிலும், பிரசித்தப்பட=வெளிப்பட, சிற்சபை = உண்மை விளங்கும் ஞானசபை.

கனிவுற = இரக்கம் தோன்ற, பொறுத்து = தாங்கி, நிமித்தம் = காரணம், பதினன்கு லோகம் = பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் (இவை மேல் ஏழுலோகங் கள்) அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம் இரசாதலம், பாதலம் (இவை கீழ் ஏழ் உலகங்கள்) ஆகப்பதி ஞன்கு உலகங்கள், ஒருங்கே=ஒன்று சேர்ந்து, தருணம் = சமயம், திருவரவு = இறைவர் வருகை, விரதங்காத்தல் = மேற்கொண்ட நோன்பு கெடாதிருக்கப் பார்த்துக்கொள்ளல், எல்லவரும் = எல்லோரும், அசிந்திய = மனத்துக்கு எட் டாத, கணம் = கால நுட்பம், புருஷார்த்தம் = மக்கள் அடைய வேண்டிய பொருள்கள், சுவர்ண தேகம் = ஞான

Koviloor Digital Library

ஒளிபெற்ற உடல், அதாவது இந்திரியவாசனை வீசாத தேகம், கலை + அனுபவம். சொரூபம் = உண்மை. கருமசித்தி = செயல் கைகூடுதல், பேறும் = பாக்கியமும், இன்றியமையாதது = முக்கியமானது, நாதம் = திருமுறை ஓசை, வேதவோசை அல்லது சிவதத்துவம், சுகந்தம் = நறுமணம் ஞானம் + இந்திரியம் = ஞானேந்திரிய ஒழுக்கம் = நல்ல வழியில் புலன்களைச் செலுத்துதல், கருணை ஒழுக்கம் = நல்லெண்ணங்களைப் பெற்று ஒழுகும் ஒழுக்கம், சீவ ஒழுக்கம் = நல்ல குறிக்கோள்களை வகுத்துக்கொண்டு ஒழுகும் ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் = சீவ சாட்சிநிலை பெற்றிருத்தல், ஜீவ ஹிம்சை = உயிர்க்கு வேதனை, பரிச்சயம் = பழக்கம், நடமாடுதல், பாதைகள் = முறைகள், ஜலம் = மூத்திரம், கிரமம் = முறை, ஔடதம் = மருந்து, பவுதிக பக்குவம் = மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களின் சம்பந்தமான இயற்கை வழியில் நீக்கிக்கொள்ளும் பக்குவம் கருமம் + இந்திரியம், ஆபாசம் = அசுத்தம், சத்துரு = பகைவர், அதிக்கிரமம் = மீறிப்போதல், கோத்திரம் = குடி சூத்திரம் = அனுஷ்டான முறையை விளக்கமாகக் கூறும் தருமசூத்திரம், உயிர் எண்பத்துநான்கு லட்சவகைப்பிறப்பை எடுக்கிறது. அவை தேவர் பிறப்பு பதினன்கு லட்சம், மக்கட் பிறப்பு ஒன்பது லட்சம், விலங்குப் பிறப்புப் பத்து லட்சம், பறவைப் பிறப்புப் பத்து லட்சம், ஊர்ந்து செல்லும் உயிர்களின் பிறப்பு பதினொரு லட்சம், நீர் வாழும் உயிர்களின் பிறப்பு பத்து லட்சம், மரஞ் செடி முதலான தாவரப்பிறப்பு இருபதுலட்சம், ஆக எண்பத்து நான்கு லட்சம், நூறுயிரம் = இலட்சம், யோனி = கரு உண்டாகும் பை, நுகர்தல் = அனுபவித்தல், அருந்துதல், இச்சை = விருப்பம், பலகால் = பல முறை, சாதனம் = அடையாளங்கள், பயிற்சிகள், கதி =

Koviloor Digital Library

நிலே, தத்துவசித்தி விகற்ப பேதங்கள் = தத்துவசித்தியின் உட்பிரிவுகள், வேதம் + அந்தம் = வேதத்தின் முடிவு, சித்தர் + அந்தம் = அறிஞர் கண்டமுடிவு, மார்க்கம் + அனுபவம், இலேசம் = மனத்தால் எண்ணியதை வெளிக் குறியால் உணர்த்துவது. மதம் + ஆசாரம் = சமய ஒழுக்கம், அனுட்டியாது = மேற்கொள்ளாமல், உலகியற்கண் = உலக விடயத்தில், துணை = அளவு, திரிகரணம் = மனம், வாக்கு, காயம், தரிக்க = இருக்க, சரம் + அசரம் = அசையும் பொருளும், அசையாப் பொருளும், நடாத்துவித்து = நடக்கும்படி செய்து, வழிபடுகை = வணக்கம் செய்தல்; பின் பற்றுதல், மங்கலம் = நற்செயல்கள், புனைதல் = செய்தல், திருப்பணி = தொண்டு, காணம் + இந்திரியம், குதூகலம் = மகிழ்ச்சி, விந்து விளக்கம் = புருவமத்தியில் விளங்கும் விளக்கம், அல்லது வீரியத்தை மேல் ஓங்கச்செய்வதால் ஏற்படும் பலம், நாத ஒலி = நாததத்துவ ஒலி, புறக்கடையில் = வெளிப்புறத்தில், திருக்கோலம் = அழகிய வடிவம், குழைய = உருக்க, பரவசம் = ஆனந்தம் எமராங்காள் = எம்முடைய உறவினர்களே! சாமந்தர் = சிற்றரசர், மந்திரிகள், தரம் = தகுதி, காமம் + அந்தகாரம் = காம இருள், அத்தை = அந்தப் பேர் இன்ப நிலையை, நான்கு + திசை = நாற்றிசை, திசைக்கண் = திசைகளில், நமராங்காள் = நம்மவர்களே, ஆற்றல் = வல்லமை, புவி = உலகு.

4. நித்தய ஒழுக்கம் என்னும் உலகியல்

மைதுனம் = மாதர் புணர்ச்சி, சூரியன் + உதயம். உதயம் = தோற்றம்; உபாதிகள் = துன்பம்; சங்கற்பம் = கொள்கை, நாசி = மூக்கு, கரிசலாங்கண்ணி = ஒருவகைத்

Koviloor Digital Library

தாவரம். ஆரணம் = நாள், நாழிகை என்பது 24 நிமிட நேரம், ஆலசியம் = தாமதம், அக்கினி அளவு = பசியளவு, ஏகதேசத்தில் = அடிக்கடி இல்லாமல் சிற்சில வேளைகளில், மோதகம் = கொழுக்கட்டை, ததி + ஓதனம் = தயிர்ச் சாதம், சித்திரான்னம் = புளியோரை, ததியோதனம் சர்க் கரைப் பொங்கல் முதலியன இப்பெயரால் வழங்கப்படும் சாதங்கள், சிலேத்துமம் = குளிர்ச்சி சம்பந்தமான நோய், வாதம் = வாய்வு சம்பந்தமான நோய், பித்தம் = உஷ்ண சம்பந்தமான நோய், பஞ்சவாசம் = ஐந்து வகையான வாசனை, அவை இலவங்கம், ஏலம், பச்சைக் கர்ப்பூரம், சாதிக் காய், தக்கோலம் என்பன, புறத்தில் = வெளியில், நெளிவு = தளர்ச்சி, காணசுதந்திரம் = மனம் முதலிய கரணங்கள் தன் வயப்பட்டிருத்தல், பரிச்சேதபயம் = அற்ப தோற்றத்தால் ஏற்படும் பயம்.

ஓங்கார பஞ்சாட்சரம் = ஓம் என்னும் பிரணவத்தில் அடங்கிய ஐந்து எழுத்தால் ஆன மகாமந்திரம், பஞ்ச + அட் சரம் = ஐந்து எழுத்துக்கள், விரேசனம் = மலம் மிகுதி யாகக் கழித்தல், பேதி, வமனம் = வாந்தி, நசியம் = மூக்கி விடும் மருந்து, இதனால் மூக்கில் உள்ள அழுக்குகளை நீக்கு தல், மூக்குப்பொடி, அஞ்சனம் = மை, தீட்டல் = இடுதல், ஒருபட்சம் = பதினைந்து நாட்கள், சாவதானம் = நிதானம், துர்கந்தம் = கெட்ட வாசனை, உலோபம் = ஏழை எளியவர் கட்கு ஈயாத குணம், சுகியம் = இக் காலத்தில் சுய்ய உண்டை என்று குறிப்பிடும் தின்பண்டம், தந்தம் = பல், சாமம் = ஏழரை நாழிகை நேரம், அதாவது மூன்று மணி நேரம், அனுபானித்து = உடன் சேர்த்து, சத்துவமான = சாரமான, நன்மையே நோக்கும் தன்மையான.

Koviloor Digital Library

5. உபதேசம்

அதிட்டிக்கின்ற = இடமாகக்கொண்டுள்ள, வேலாயுத முதலியார் = வள்ளலாரின் மாணவர், இலக்கண இலக்கியம் நன்கு கற்றவர், அனந்தம் = பல, உன்னியும் = எண்ணியும், பரலோகம் = மேலுலகம், இகலோகம் = இவ்வுலகம், ராகம் + ஆதிகளை = ஆசை முதலியவற்றை, முழை = மலைக்குகை, இகவிசாரம் = இவ்வுலகத்தைப்பற்றிய விசாரம், அன்னியில் = தவிர்த்து. நெகிழ்ச்சி = இரக்கம், உபசர்க்கம் = சமஸ்கிருத மொழியில் இதனை அடை உருபு என்பர். யா = எவை, கூறு = பகுதி, போகலட்சியம் = இன்பத்தையடையும் குறிக்கோள், சாத்தியம் = நிறைவேற்றக் கூடியது, புனிதர் = பரிசுத்தவான்கள், பஞ்சகிருத்தியம் = ஐந்து வகையான செயல்கள், அவை தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல் விளக்கம் செய்பல், விபவம் = பெருமை, இதர = வேறு, பொன்மை = தொன்நிறம், எட்டுத் திரைகள் = கரும்பெருந்திரை, நீலப்பெருந்திரை, சுத்தமாயாதிரை, அசுத்தமாயாதிரை செம்மைத்திரை பொன்மைத்திரை வெண்மைத்திரை, கலப்புத்திரை. லட்சியம் = குறிக்கோள், குழூஉக்குறி = ஒரு கூட்டத்தவர் மட்டும் விளங்கிக்கொள்ளும் வகையில் ஒன்றிற்கு ஒரு பெயரைக் குறிப்பிட்டுக் கொள்ளுதல். குடியர் கள்ளை ஆகாசப்பால் என்பது போல, புறங்கவிய = அன்னியர்களும் ஒப்புக்கொள்ளும்படி, பிண்டம் = உருவற்ற கருவு, அண்டம் = உலகவெளி, சத்திய லோகாதிபதி = பிரமன், சத்திய + உலக + அதிபதி, இந்திர சாலம், = மாயாவித்தை; சாலம் = கண்கட்டி வித்தை, தேசிகன் = குரு, அலங்கல் = மாலை பாசுரம் = பாட்டு, வியாகரணம் = சமஸ்கிருத இலக்கண

Koviloor Digital Library

நூல், தொல்காப்பியம் தமிழில் உள்ள மிகப் பழைய இலக்கண நூல் இதனால்தமிழர் நாகரிகங்களை அறியலாம். இதை எழுதியவர் தொல்காப்பியமுனிவர். பாணினியம் = பாணினி முனிவரால் எழுதப்பட்ட வட மொழி இலக்கணம், கணிதம் = அளவு, இலக்கம் = எண்கள், உகர இறுதி = உ என்னும் எழுத்தைக் கடைசியில் பெற்று இருத்தல், தொக்கியது = மறைந்தது, தொன்மை = பழமை, மருவியது = திரிந்தது.

வாசகப் பெருவிண்ணப்பம் என்பது வள்ளலார் எழுதிய ஓர் அருமையான உரைநடை. இங்குக் குறிப்பிடப்பட்ட பாடல்கள் கீழ்வருவன.

1. மாயையால் கலங்கி வருந்திய போதும்
வள்ளல்! உன் தன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவ! வேறுஎண்ணிய துண்டோ?
தூயபொன் பாதம் அறியநான் அறியேன்;
துயர்இனிச் சிறிதும் இங்கு ஆற்றேன்;
நாயக! எனது மயக்கெலாம் தவிர்த்தே
நன்றுஅருள் புரிவதுஉன் கடனே.

2. தேடியதுண்டு நினதுரு உண்மை;
தெளிந்திடச் சிறிது நின்னுடனே
ஊடியதுண்டு; பிறர்தமை அடுத்தே
உரைத்ததும் உவந்ததும் உண்டோ?

Koviloor Digital Library

ஆடியபாதம் அறியநான் அறியேன் ;
அம்பலத் தருட்பெருஞ் சோதி !
கூடியநின்னைப் பிரிகிலேன் ; பிரிவைக்
கூறவும் கூசும்என் நாவே.

3. " கருணையும் சிவமே பொருள்எனக் காணும்
காட்சியும் பெறுக !மற் றெல்லாம்
மருள்நெறி " எனநீ எனக்கறி வித்த
வண்ணமே பெற்றிருக் கின்றேன் ;
இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம்
எய்திய தென்செய்வேன் ? எந்தாய் !
தெருள்நெறி இன்றிக் கலங்கினேன் ; எனினும்
சிறுநெறி பிடித்ததொன் றிலையே.

ஊடியது = சிறிது மனவேறுபாடு கொண்டது, உவந்தது = மகிழ்ந்தது, மருள் = மயக்கமான, நெறி = வழி, தெருள்நிலை = தெளிந்த நிலை, பதிகம் = பத்து அல்லது பதினொரு பாடல்கள் அடங்கிய பாட்டுத் தொகுதி, நிலைமிசை = நிலையில், அண்டம் + அண்டங்களுக்கு = உலகங்களுக்கும் அவ்வுலகங்கட்கு அப்பாலும் உள்ள உலகங்கட்கும், நேயம் = அன்பு, ஒருமைப்பாடு = ஒற்றுமைப்பாடு. சாலை சத்திரம் = வள்ளலார் வடலூரில் ஏற்படுத்திய தரும சாலை, வாதிகள் = தர்க்கம் செய்பவர், புறமுகம் = வெளிப்பட்ட நிலையில், உள்ளும் = மனத்திலும், புறமும் = வெளியிலும், சொரூபம் = உண்மை, ரூபம் = வடிவம், சுபாவம் = இயல்பு, தத்துவங்கள் = பொருள்கள், பிரபஞ்சபோகம் = உலக

Koviloor Digital Library

இன்பம், நிர் + ஆசை = ஆசை இல்லாமை, சரியை முதற் சாதகம் நான்கு = சரியை கிரியை, யோகம், ஞானம் முதலான பயிற்சிகள் நான்கு, சரியை = ஒழுக்கம், கிரியை = செய்கை, யோகம் = தவநிலை, ஞானம் = அறிவு நிலை, = கண்டம் = சில பகுதிகள், அகண்டம் = எல்லாப்பகுதிகள். அனந்தம் = பல, சங்கை = எண், சுவர்கம் = மோட்ச உலகம், அறிவின்கண் = அறிவில், ஐயம் = சந்தேகம், திரிபு = வேறுபாடு, வாச்சியம் = வெளிப்படை 'சந்ததமும் வேதமொழி" என்னும் பாடல் தாயுமானவர் பாடல், அப் பாடல்.

"சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றும் எனலால்,

சகமீ திருந்தாலும் மரணம்உண் டென்பது
சதாநிஷ்டர் நினைவ தில்லை ;

சிந்தைஅறி யார்க்கிது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகு தர்க்கமாம் ;

திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யர் அலரோ ?

இந்திராதி தேவதைகள், பிரமாதி கடவுளர்,
இருக்காதி வேத முனிவர்,

எண்ணரிய கணநாதர், நவநாத சித்தர்கள்,
இரவிமதி ஆதி யோர்கள்,

Koviloor Digital Library

கருவர் கின்னர்கள் மற்றையர்கள் யாவரும்
கைகுவித் திடும தெய்வமே,
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும்
கருணை கரக் கடவுளே !

என்பது.

நாபி = கொப்பூழ், ஈறு = முடிவு, நாடி = இரத்தக் குழாய், ஆப்தர்கள் = அன்பர்கள், சந்ததமும் = எப்பொழுதும், சகம் = பூமி, சதா = எப்பொழுதும், நிஷ்டர் = யோகத்தில் இருப்பவர், செப்பினும் = சொன்னாலும், சுகர் ஆதி = சுகப் பிரம்மரிஷி முதலானவர், இருக்குஆதி = ரிக் வேத முதலான, இருக்கு, யஜுர், சாமம், அதர்வண வேதங்கள், நவநாதர் = ஒன்பது சித்தர்கள், இரவி = சூரியன் மதி = சந்திரன், கருதரிய = நினைத்தற்கு அருமையான, சிற்சபையில் = சிதம்பரப் பொற்சபையில், நிர்த்தம் = நடனம் கருணை + ஆகரம் = இரக்கத்திற்கு இருப்பிடமான.

KOVILOOR MADALAYAM
KOVILUR 307
KANADUKATHAN VIA

௧987
265(ஓவா)

Printed at the Caxton Press, Madras.—1952.